விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 337 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 05 செவ்வாய்க்கிழமை (21.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## நினைவேந்தும் உரிமையை யாரும் தடுக்க முடியாது
### மல்லாகம் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

உயிரிழந்தவர்களை நினைவுகூரும் உரிமையை யாரும் தடுக்க முடியாது என பொலிஸார் நினைவேந்தலை தடை செய்யக் கோரிய விண்ணப்பத்தை நிராகரித்த மல்லாகம் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு வழங்கியுள்ளது.

தெல்லிப்பழை மற்றும் அச்சுவேலி பொலிஸாரால் மாவீரர் நாள் நினைவேந்தல்களை தடை செய்யுமாறு கோரி மூன்று நபர்களின் பெயர்களை குறிப்பிட்டு மல்லாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்த 15

## மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு
### நல்லூரில் இன்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் நல்லூரில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிரை தியாகம் செய்த போராளிகளை நினைவுகூரும் மாவீரர் வாரம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இதனையொட்டி யாழ்ப் 15

# மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

- நினைவேந்தலுக்கு தயாராகும் துயிலுமில்லங்கள்.
- தமிழர் தாயகத்தில் கெடுபிடிகளும் தாராளம்.

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர் தின அனுஷ்டிப்பு வாரம் இன்று ஆரம்பமாகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)



### கொக்குத்தொடுவாய்
## மனித புதைகுழி அகழ்வு ஆரம்பம்



15

### சீனிக்கு விதிக்கப்பட்ட
## கட்டுப்பாட்டு விலை நீக்கப்படும்

(கொழும்பு)

சீனிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை நீக்க நடவடிக்கை எடுக்கப் 15

### கைதி மரணம்
## பொலிஸார் இருவருக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த விளக்கமறியல் கைதி ஒருவர் 16

## கடும் துன்புறுத்தலால் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு இளைஞன் மரணம்
### சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கடுமையாக அடித்து துன்புறுத்தப்பட்டதால் சிறுநீரகம் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்தார் என்று சட்ட மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் நேற்று நண்பகல் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் இவ் அறிக்கை யிடப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதவான் நீதிமன்றின் உத்தரவில் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருந்த சந்தேக 02

### நவாலியில்
## மயங்கி விழுந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நவாலிப் பகுதியில் துவிச்சக்கரவண்டியில் சென்றுகொண்டிருந்த ஒருவர் மயங்கி விழுந்து 15

### பரதத்தை இழிவுபடுத்தி கருத்து
## இஸ்லாமிய மதகுருவுக்கு எதிராக அராலியில் கண்டனப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

பரதத்தை இழிவுபடுத்தி கருத்து வெளியிட்ட இஸ்லாமிய மதகுரு 15

## சீன - இலங்கை உடன்படிக்கை விரைவில் நடைமுறையில்
### ஜனாதிபதி – சீன பிரதிநிதி சந்திப்பில் இணக்கம்



(கொழும்பு)

சீனா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை விரைவில் நடைமுறைப்படுத்த உடன் 16

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கலாபூஷணம் பீதாம்பரம் காலமானர்



(யாழ்ப்பாணம்)

வண்ணை கலை வாணர் நாடகமன்றத்தின் அமைப்பாளரும் சிறந்த நாடகக் கலைஞருமான கலாபூஷணம் இராசையா பீதாம்பரம் (பற்குணம்) நேற்றுக் காலமானர்.

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணை நாச்சிமார் கோவிலடிய்ய வதிவிடமாகவும் கொண்ட பீதாம்பரம் ஈழத்து நாடகக் கலைத்துறைக்கு அரும்பணி ஆற்றியவர். இவரின் சேவைக்காக பல அமைப்புகள் விருதுகள் வழங்கி கௌரவித்துள்ளன.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை அவரின் இல்லத்தில் இடம்பெறும். (ம-7)

# தேர்தலை நடத்தாவிட்டால் ரணிலை வீட்டுக்கு அனுப்புவோம்

## அநுரகுமார திஸாநாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலொன்று வைக்காவிடின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வீட்டுக்கு அனுப்ப தயார்ாக உள்ளோம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட மொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"அவருக்கு இரண்டு தெரிவுகள் உள்ளன. ஒன்று அரசியலமைப்பின் படி ஜனாதிபதித் தேர்தலை அடுத்தாண்டு செப்டம்பர் 17ஆம் திகதிக்கு பின்னரும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னரும் நடத்த வேண்டும். ஜனாதிபதி தேர்தலை நடத்த மாட்டோம் என கூறினால் அவரை வீட்டுக்கு அனுப்ப தயாராக உள்ளோம்.

தன்னை மிகவும் சக்தி வாய்ந்த ஜனாதிபதி என்று கூறிய கோட்டாபய ராஜபக்ஷவை இந்த நாட்டு மக்களை வீட்டுக்கு அனுப்பினார்கள். ஆனால் அவர் வீட்டுக்கு அனுப்பப்பட்ட போது அதிகாரத்தை மக்களிடம் கொண்டு சேர்க்கும் திட்டம் எதுவும் இல்லை. அதனால் வேறு வழியின்றி ரணில் ஜனாதிபதியானார்.



அதிகாரத்தை வேறு எவருக்கும் பெற்றுக்கொடுக்க நாம் தயார் இல்லை. மக்களுக்கு அதிகாரத்தை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்துடனேயே ரணிலை வீட்டுக்கு அனுப்புவோம்." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

# கிளிநொச்சியில் கஞ்சாவுடன் இளைஞன் கைது

கிளிநொச்சிப் பாரதி புரத்தில் 70 கிராம் கேரள கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார். இவரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,316)

# கடும் துன்புறு...

நபரே நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.


சித்தங்கேணி கலைவாணி வீதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் (வயது 26) என்பவரே உயிரிழந்தார். சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சந்தேக நபர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் உள்ளிட்ட இருவர் கடந்த 8ஆம் திகதி திருட்டுச் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. உடற்கூற்று பரிசோதனையின் பின்னரே உயிரிழப்புக்கான காரணம் வெளியிடப்பட்டுள்ளது. (ம-7,33,104)

கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் வலி. மேற்கு பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய
திரு. சி. ஆதவன் அவர்களின் பாசமிகு தந்தை
அமரர்
சோமசுந்தரம் சிதம்பரநாதன்
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் - வடமாகாணம்
(17947)

**பகிரங்க அறிவித்தல்**

## பிரதேச சபை சாவகச்சேரி

### 2024ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் (வரைவு) பொதுமக்கள் பார்வைக்கு சமர்ப்பித்தல்

சாவகச்சேரி பிரதேச சபையின் **2024**ம் ஆண்டிற்கான சபையின் வரவு செலவுத்திட்ட வரைவு பொதுமக்கள் கருத்தாய்வுக்காக **2023.11.21**ம் திகதியிலிருந்து **2023.12.04**ம் திகதி வரை சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

குறித்த பாதீட்டில் **2024**ம் ஆண்டில் சேகரிக்கக்கூடிய வருமானங்கள், செலவின விடயப் பரப்புக்கள் சம்பந்தமாகவும் எதிர்வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளதும் ஏற்கனவே தங்களினால் முன்மொழியப்பட்டதுமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் உள்ளக்கப்பட்டுள்ளது. குறித்த பாதீட்டில் உள்ளடக்க வேண்டிய மேலதிக முன்மொழிவுகள் ஏதும் இருப்பின் **2023.12.04**ம் திகதிக்கு முன்னர் தலைமை அலுவலத்தில் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ தெரிவிக்க முடியும் என்பதை இத்தால் பகிரங்கமாக அறியத் தருகின்றேன்.

**வரைவு வரவு செலவுத் திட்ட சுருக்கம்**

**எதிர்பார்க்கப்படும் வருமானம்**

| | |
|---|---|
| சபையின் சொந்த வருமானம் | - 106,789,110.00 |
| நன்கொடைகள் மற்றும் மீள் நிரம்பல்கள் | - 74,058,848.00 |
| பிற மூலதனப் பெறுகைகள் | - 57,000,000.00 |
| எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் | - 237,847,958.00 |

**செலவினம்**

| | |
|---|---|
| மீண்டெழும் செலவினம் | - 132,368,958.00 |
| மூலதன செலவினம் | - 48,476,000.00 |
| பிற மூலதன செலவினம் | - 57,000,000.00 |
| எதிர்பார்க்கப்படும் மொத்த செலவினம் | - 237,844,958.00 |

செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை.

2023.11.21 (C-7686)

மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7685)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2023ஆம் அண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த எமது பாடசாலை மாணவி

செல்வி றமேஸ் அங்கவி

(163 புள்ளிகள்)

அவர்களை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.



Best Wishes

பாடசாலைச் சமூகம் (17943)
யா/சண்டிலிப்பாய் வடக்கு தமிழ் கலவன் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிறுவர் சார்ந்த குற்றச் செயல்கள்

# வருடாந்தம் சுமார் 5 ஆயிரம் பதிவுகள்

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் வருடாந்தம் சிறுவர்கள் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் சுமார் 5000 பதிவாவதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.**



இவ்வாறான பலகுற்றச்செயல்களுக்கு போதைப்பொருள் பாவனை மற்றும் தொலைபேசிப் பாவனையே வழிவகுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் வருடாந்தம் சுமார் 5,000 சிறுவர்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் பதிவாவதாக புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

போதைப்பொருள் பிரச்சினையே எமது நாட்டில் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளதுடன் மற்றுமொரு மிகப்பெரிய காரணியாக சிறுவர் துஷ்பிரயோகமும் காணப்படுகின்றது.

இன்று கையடக்கத் தொலைபேசிகள் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு இட்டுச் செல்லும் ஆபத்தான ஆயுதமாக மாறியுள்ளது.

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகத்தை குறைப்பதற்கு நாம் முயற்சி எடுத்தால், பெற்றோர்கள் கண்டிப்பாக வீட்டில் கையடக்கத் தொலைபேசி பாவனையை கட்டுப்படுத்த வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5-6)

# தினேஷ், ரணதுங்க, ரணில் சந்திப்பு

(கொழும்பு)

கொழும்பு அரசியல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவையும் ஆளும் கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவையும் இரகசியமாக அழைத்து முக்கிய பேச்சு நடத்தியுள்ளார்.

கடந்த வாரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் மிகவும் இரகசியமான முறையில் நடைபெற்ற அந்தச் சந்திப்பு அரை மணி நேரத்துக்கும் மேலாகத் தொடர்ந்தது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

# உள்ளூராட்சி ஊழியர்கள் 8400 பேருக்கு விரைவில் நியமனம்

## அமைச்சர் ஜானக வக்கும்புர

(கொழும்பு)

உள்ளூராட்சிமன்றங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 8400 ஊழியர்களுக்கும் விரைவில் நியமனங்கள் வழங்கப்படும் என விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஐந்தாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.


180 நாட்களுக்கு மேல் பணிபுரியும் சாதாரண தொழிலாளர்கள் இதன் மூலம் உறுதி செய்யப்படுவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# புதிய வகை பாம்பு கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 76 வருடங்களின் பின்னர் புதிய வகை பாம்பு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஊர்வன தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்ட நெது விக்கிரமசிங்க, துலன் ஆர். விதானபத்திரன, மகேஷ் சி. டி சில்வா, கொழும்பு பல்கலைக் கழக பேராசிரியர் கமானி எச். தென்னகோன், பேராசிரியர் சமீரா ஆர். சமரகோன் மற்றும் ஊர்வன நிபுணர் மெண்டிஸ் விக்கிரமசிங்க ஆகியோர்



நீண்டகால ஆராய்ச்சியின் பின்னர் இந்த இனத்தை கண்டுபிடித்துள்ளனர்.

இலங்கையில் காணப்படும் 108 வகையான பாம்புகளில் 10 இனங்கள் ஸ்கோகோபீடியா குழுவைச் சேர்ந்த பாம்புகளாக குறிப்பிடப்படுகின்றன.

உலர் வலயத்திற்குட்பட்ட கிரித்தலே பிரதேசத்தில் இந்தப் புதிய வகை பாம்பு இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் காணப்படும் பாம்பு இனங்களின் எண்ணிக்கை தற்போது 109 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# இலங்கையுடனான பங்களிப்பை அமெரிக்கா தொடர்ந்தும் மதிக்கும்

## ஜனாதிபதிக்கு சமந்தா பவர் உறுதி



(கொழும்பு)

இலங்கையுடனான பங்களிப்பை அமெரிக்கா தொடர்ந்தும் மதிப்பதாக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க ஏஜென்சியின் நிர்வாகி சமந்தா பவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தார்.

மாலைதீவின் புதிய ஜனாதிபதி மொஹமட் முய்ஸ‌ு பதவியேற்பு நிகழ்விற்கா[illegible] தீவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் அரசியல் சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை இதன்போது வலியுறுத்தியதாக சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் இலங்கையின் துறைமுக உள்கட்டமைப்பில் அண்மையில் 550 மில்லியன் முதலீடு செய்தது.

இந்த விடயத்தை சுட்டிக்காட்டிய சமந்தா பவர், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அரசாங்கத்தின் நிலைப்பாடு இதில் வெளிக்காட்டப்பட்டுள்ளது என் [illegible]

# பொதுமக்களின் வரிச்சுமை குறைக்கப்பட வேண்டும்

## முன்னாள் நிதி அமைச்சர்



(கொழும்பு)

பொதுமக்களின் வரிச்சுமை குறைக்கப்பட வேண்டும் என முன்னாள் நிதி அமைச்சர் ரவிகருணா!!நாயக்க தெரிவித்துள்ளார்.

திவால்நிலையிலிருந்து வெளியேவர வேண்டும் என்றாலும் சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஏற்ப ஆட முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

ஆகவே வரிகளை குறைப்ப தற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க வலியுறுத்தியுள்ளார். ஏற்கனவே வரி செலுத்தி வருபவர்களுக்கு சுமையை ஏற்படுத்தாமல் வரி வலையை விரிவுபடுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# என்றும் உங்களுடன்!



உலகக் கிண்ணப் போட்டி முழுவதும் உங்களுடைய திறமை மற்றும் உறுதி குறிப்பிடத் தகுந்த விடயம் அத்துடன் சிறந்த ஸ்பிரிட் உடன் விளையாடி நாட்டிற்கு மகத்தான பெருமை சேர்த்துள்ளீர்கள். நாங்கள் இன்று போல் எப்போதும் உங்களோடு நிற்போம் என இந்தியப் பிரதமர் நரந்திரமோடி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற உலகக்கிண்ண இறுதிப்போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தது. இதனால் இந்திய அணி வீரர்கள் மிகவும் கவலையுற்று இருந்தனர்.

இது தொடர்பில் பிரதமர் மோடி நேற்று தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவின் போதே இவ்வாறு கருத்துத் தெரிவித்திருந்தார். (நி-5-6)

## போட்டியின் இடைநடுவே ஹோலியை கட்டித் தழுவிய ஆதரவாளர்

2023 ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி இந்தியாவின் நரேந்திர மோடி விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதிப்போட்டியின் போது பாலஸ்தீன ஆதரவாளர் ஒருவர் திடீரென மைதானத்திற்குள் ஓடிச் சென்று ஹோலியை கட்டிப்பிடித்தார். இதனால் போட்டி சற்று நேரம் தடைப்பட்டது. இந்தியா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் மோதின இறுதிப் போட்டியில் இந்திய அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தது.

போட்டியின் 13 ஆவது ஓவரின் போது குறித்த நபர் பாலஸ்தீன கொடியுடன் 'Free Palestine' என்ற வாசகம் எழுதிய ரீசேர்ட்டுடன் மைதானத்திற்குள் ஓடிச் சென்று இந்திய வீரர் ஹோலியை கட்டிப்பிடித்தார்.

இதன்போது சாதூரியமாக செயற்பட்ட ஹோலி அதிலிருந்து விலகிச் சென்றார்.

உடனடியாக செயற்பட்ட மைதானப் பாதுகாப்பு பிரிவினர் குறித்த நபரை மைதானத்தில் இருந்து வெளியேற்றினர். (நி-5-6)




## உலகக்கிண்ண நாயகர்கள்



விராட் கோலி (765) அதிக ரன்கள் அடித்துள்ளார்.



மேக்ஸ்வெல் (201*) தனிப்பட்ட வீரரின் அதிகபட்ச ஸ்கோராகும்



ரோகித் சர்மா (31) அதிக சிக்ஸ் அடித்த வீரர்



முகமது சமி (24) அதிக விக்கெட் வீழ்த்திய வீரர். முகமது சமி (7/57) ஒரு போட்டியில் அதிக விக்கெட் வீழ்த்திய வீரர்



(4) அதிக சதம் அடித்த வீரர் (20) அதிக விக்கெட் வீழ்த்திய விக்கெட் கீப்பர்



டேரில் மிட்செல் (11) அதிக கேட்ச் பிடித்த பீல்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் மறுசீரமைப்பு நடவடிக்கை வருட இறுதிக்குள் நிறைவு

## நிதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையை நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த மறுசீரமைப்பு நடவடிக்கை நிறைவடைந்ததும் இடைநிறுத்தப்பட்டுள்ள சுமார் 200 வியாபார நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீளும் என்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடம் இருந்தும் நிதியுதவிகள் கிடைக்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அடுத்த மார்ச் மாதத்தில் இருந்து அனைத்து துறைகளும் எழுச்சி பெறும் என்றும் ஒட்டுமொத்த பொருளாதார நிலையையும் கருத்தில் கொண்டு வரவு-செலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (நி-5)

## கிரிக்கெட் இடைக்கால குழுவுக்கெதிரான மனு விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழுவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மனு சோபித்த ராஜகருணா மற்றும் டீ.என் சமரக்கோன் ஆகிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் நேற்று ஆராயப்பட்டது.

இதன்போது குறித்த மனு மீதான விசாரணையை நாளை புதன்கிழமை வரை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## ஞாயிற்றுக்கிழமை பாராளுமன்றம்

(கொழும்பு)

பெறுமதி சேர் வரி திருத்தம் மற்றும் பணச் சட்ட மூலங்கள் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் அடுத்த மாதம் டிசெம்பர் இடம்பெறவுள்ளது. அதன்படி அடுத்த மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடத்துவதற்கு பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழு நேற்று தீர்மானித்துள்ளது. (நி-5)


# கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலை ஆசிரியர்
திரு.க.முரளி அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர். திரு. நாகமணி கணபதிப்பிள்ளை
(ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்)

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து துயரடைவதுடன் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பணிகின்றோம்.

(C-7681)

பாடசாலைச் சமூகம்,
யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.



# நகராட்சிமன்றம் சாவகச்சேரி

**சாவகச்சேரி நகரசபையின் சட்ட ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் ஒப்பந்த அடிப்படையிலானது.**

சாவகச்சேரி நகர சபைக்கு சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காகவும் சபை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்காகவும் 01.01.2024 ஆம் திகதி முதல் நியமிக்கப்படும் வகையில் சாவகச்சேரி நகர சபையின் சட்ட ஆலோசகர் பதவி ஒன்றிற்காக தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

1. இந்நியமனமானது ஒரு வருட காலத்திற்கானது என்பதுடன் நகர சபையின் தேவையின் அடிப்படையில் இவ் ஆலோசனைச்சேவை சபையினால் நீடிக்கப்படலாம்.
2. நியமிக்கப்படுபவர் சபை சார்பான நீதிமன்ற வழக்குகள் தொடர்பிலும், சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகள் தொடர்பிலும், தமது ஆலோசனைகளை வழங்குவதுடன் நகரசபையின் சார்பில் நீதி மன்றுகளில் முன்னிலையாதல் வேண்டும்.
3. நகரசபை சார்பான உடன்படிக்கைகள், உறுதிகளை அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.
4. இந்த ஆலோசனை சேவையானது ஒரு மாதகால எழுத்து மூல முன்னறிவித்தலினை இரு பகுதியினரில் ஒரு பகுதியினர் மற்றவருக்கு வழங்குவதன் மூலம் நிறுத்தப்படவோ மாற்றங்கள் செய்யப்படவோ கூடியதாகும்.
5. வாரத்தில் குறைந்தது 2 நாட்கள் பகுதி நேரமளவில் சட்ட ஆலோசனையின் பொருட்டு அலுவலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

**அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி உயர்நீதிமன்ற சட்டத்தரணியாகவும் நொத்தாரிசாகவும் சத்தியப்பிரமாணம் செய்தவராக இருத்தல் வேண்டும்.
2. 60 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் முன்னனுபவமும் உள்ளவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**தெரிவு செய்யப்படும் முறை**

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் நகரசபையால் நியமிக்கப்படும் தேர்வுக்குழுவின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரியின் சுயவிபரங்களுடன் தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் தாங்கள் உள்ளூராட்சி மன்றத்திற்கு வழங்கும் சேவைகள் தொடர்பாக அறவிடப்படும் கட்டணம் தொடர்பான விபரங்கள் என்பவற்றினை நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் **"செயலாளர், நகரசபை, சாவகச்சேரி"** எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத்திகதி அன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி -08.12.2023

செயலாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

(சி-7684)


# இராசிபலன்

21.11.2023
கார்த்திகை 05, ஞாயிற்றுக்கிழமை
நவமி பின்னிரவு 1.13 மணிவரை
சதயம் முன்னிரவு 8.38 மணிவரை

சுபநேரம் -10.40-12.10 மணிவரை
இராகுகாலம்-3.10-4.40 மணிவரை

சந்திராஷ்டமம்
பூசம், ஆயிலியம்.


வளவன்




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.





செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், ஆரோக்கியமான நாள்.





தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




குடும்பத்தில் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தும் நிலை ஏற்படலாம், மனக்கவலை அதிகரிக்கும் நாள்.





புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவுப் பலிதமுண்டு, உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.





எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி பெறும், போசன சுகமுண்டு.




சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.





வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாராட்டும் புகழும் கூடும் நாள், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், போசன சுகமுண்டு.





பாகப் பிரிவினைகள் சுமூகமாக அமையும், தொலைபேசித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.




உறவினர் சிலரின் அன்புக்கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களால் தேகநலன்கள் பாதிக்கப்படலாம், தூரதேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும்.

உன்ன நேரம் ஒதுக்குங்கள் அது செயலாக்கத்துக்கு புது சக்தி கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதி உயிரிழந்தமை தொடர்பில்

# வட்டுக்கோட்டை பகுதியில் பலத்த பாதுகாப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பகுதியில் நேற்று நண்பகல் இரும்பு பாதுகாப்பு வேலிகள் கொண்டு வரப்பட்டு அங்கு விசேட அதிரடிப் படையினரும் ஆயுதங்களுடன் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளதுடன் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவின்படி யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விளக்கமறியல் கைதி உயிரிழந்தமை தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் வட்டுக்கோட்டை பொலிஸார் இருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளக்கமறியல் கைதி உயிரிழந்தமை தொடர்பில் யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் ஒரு விசாரணையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் பிறிதாக ஒரு விசாரணையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (நி-5-6-33)

## தீவக கல்வி வலயத்தில்

# வலந்தலை அ.மி.த.க பாடசாலை அல்லைப்பிட்டி றோ.க.த.க முன்னிலையில்

(யாழ்ப்பாணம்)

யா/வலந்தலை தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் அல்லைப்பிட்டி றோ.க.த.க வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளில் முதல் நிலை பெற்றுள்ளன.

வலந்தலை தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் மு.அபினாஸ்-170, வி.ஹர்சினி-167, க.அபிராமி-160, க.சுகந்தன்-158, க.கேஷனா-154 மற்றும் யோ.திலக்ஷனா-150 ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

அல்லைப்பிட்டி றோ.க.த.க வித்தியாலயத்தில் அ.அக்சிகா-177, யூ.துஷானி-168, செ.நெமிஷா-165, பி.பியானுயா-162 மற்றும் சா.சாருஜா-160 ஆகியோர் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். (நி-5-6)

# தங்க நகை அணியாத பெண்ணை தாக்கிய திருடர்கள்


(யாழ்ப்பாணம்)

வீதியில் நடந்து சென்ற பெண் சங்கிலி அணியாததால் அவரைத் தாக்கி, வீதியில் தள்ளிவிட்டு முகமூடி கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

சுழிபுரம் பகுதியில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வீட்டிற்கு அருகில் உள்ள ஆலயம் ஒன்றில் வழிபாட்டை முடித்துக்கொண்டு தனது வீடு நோக்கி குறித்த பெண் நடந்து செல்லும்போது, மோட்டார் சைக்கிள் ஒன்றில் தங்கள் முகங்களை மறைத்து துணியால் கட்டியவாறு பின்தொடர்ந்த இருவர் அப்பெண்ணின் கழுத்தில் கை வைத்துள்ளனர்.

அப்பெண் கழுத்தில் தங்க நகைகள் எதுவும் அணிந்திருக்கவில்லை என தெரிந்து கொண்டதும் அப்பெண்ணை தாக்கி, பின் வீதியில் தள்ளி விழுத்தி விட்டு முகமூடி கொள்ளையர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர். (நி-5-6-33)



மக்கள் வங்கி யாழ்.பல்கலைக்கழக கிளையினரின் ஏற்பாட்டில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்ற யாழ்.இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை மாணவி வனிஷ்காவை கௌரவிக்கும் நிகழ்வில் பாடசாலை அதிபர் மற்றும் யாழ்.கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புலமைப்பரிசில் பரீட்சை - 2023 சித்தியடைந்தோர் விபரம்

### யா/இந்து ஆரம்பப்பாடசாலை

ஐ.அஸ்விகா-192, உ.ஆராதனா-189, சி.கார்த்திகேயன்-188, மு.தேஜஸ்வினி-187, சு.ஆர்த்தனா-186, ஜெ.ஸ்ருதிகா-185, ந.சிவாஞ்சலி- 185, வி.லகீஸ்ராம்-184, நி.பாவனா-184, செ.அஸ்மிதன்-183, க.கானுசன்-183, நி.ஜர்ஷனன்-183, ம.யதுசாந்-181, பி.மானேஸ்-181, சி.விநஜா-179, நா.ப்ரவஸ்மன்-179, பி.தன்ஷிகா-179, ஜெ.ஆகர்ஷன்-178, சி.தஷ்வீன்-178, ப.பிரவின்-178, இ.தேனுஷா-178, ஜெ.ஆரதி-178, த.வர்சாலினி-177, வி.கீர்த்திக்-177, வி.பவிசன்-176, சி.கோபினா-176, உ.சோபிகா-176, த.அபிநயா-175, பி.சோபிதன்-175, அ.அபினேஷ்-174, மு.அஸ்விந்-174, லோ.டிவாஷினி-174, ம.நிக்ஷிதன்-174, ஐ.லதீசனா-174, ர.நிந்துஷன்-174, த.தன்ஷிகா-174, கி.சுபீசன்-173, அ.அசேதன்-173, சி.சங்கீனா-173, கு.சபீக்ஷா-173, பி.தணிகன்-173, ப.தனிஷ்கா-173, அ.அகர்ஷன்-172, ஷே.நிஷ்மிகா-172, கு.லவிஸ்னன்-172, ம.டிலூசணன்-172, ச.அகீபன்-171, பி.கிஷான்-171, ய.பார்கவி-171, வி.டர்சன்-171, ப.லட்சயன்-170, இ.தனுஷ்கா-170, சி.லதுஷிகா-170, சு.தரண்ஷிகா-169, க.அபீரன்-169, சு.பரணீதரன்-168, ப.யதுகா-168, ஐ.அபிஷா-168, ச.ருஷானி-168, இ.ஜீவலக்ஷன்-167, த.அகீபன்-167, சு.சாத்விகா-167, வி.திவியா-166, ஸ்ரீ.தரணியா-166, அ.ஆர்தேஷ்-166, இ.தருணியன்-166, கோ.மதீபன்-166, ஜெ.ஹரீஷ்-165, ஸ்ரீ.கவிநயா-165, பி.கனுசன்-165, ஸி.ஷகானா-165, நி.பவினாத்-164, த.பிரவீன்-164, கே.பிரஜன்-164, ம.லலித்ராம்-164, தி.வாசுதா-164, த.மோகிலன்-164, கோ.யிறோசன்-164, சி.நேருஜா-163, கோ.மானுஷா-163, ர.பிரித்திகா-163, டி.பெவிசனன்-163, நி.குகந்தினி-162, ந.அனந்திதா-162, நி.நிகிசன்-162, ஜெ.அபிசாந்-162, தி.அக்ஷரா-162, ப.அபிலக்ஷன்-162, ஜெ.நிதுசிகன்-162, ச.அக்ஷரா-162, லெ.சஸ்வினி-162, ஸ்ரீ.லக்ஸ்மினி-161, கௌ.லவணிகா-161, கி.கவின்யா-161, ச.அக்ஷா-161, சு.அஸ்வின்-160, ர.சந்தோஷ்-160, யோ.தீபிகா-160, அ.தஷ்வின்-159, வ.அஸ்வன்யா-159, வி.யாதவி-159, ர.சுபஸ்திகா-158, ப.பவஜன்-158, ச.நந்தனா-158, கு.நீனிகா-157, ஞா.கதிர்ஷிகன்-157, செ.சஞ்சுதன்-156, செ.பிரணவன்-156, செ.சாருகேஷன்-155, ந.ஜனந்தி-155, சு.சித்திராங்கன்-154, ப.கரிசாய்-154, தே.மஹநியா-154, நி.சஷ்வத் -154, பா.பாலசாயினி-154, மு.ஜாதவி-154, சி.அக்ஷயா-154, ற.விஹிர்தன்-153, த.லோகிசன்-153, ஜெ.கிர்த்திஷ்-152, வி.கன்சிகா-152, சு.சபிஷன்-152, ப.பவனிகா-152, சு.மனோஸிகர்-152, ர.நவினேஷ்-151, சா.சிவந்திகா-151, ஹ.பவதீஷனா-151, ச.அருச்சுணன்-151, மு.அஸால்அகமத்-151, கு.கஷ்வினி-151, சா.கர்ஷினி-150, கோ.பிரகதி-150, பி.வைஷ்ணவி-150, சி.தஷ்வின்-149, சு.கிஷாணியா-149, சு.திவானுஷன்-149, ச.லக்ஷிகா-149, பி.விசாலன்-149, சி.அஸ்விகன்-149, டி.நிஷிகேசன்-148, க.டக்ஷனா-148, கு.ஷங்கரி-148, க.சாஹித்யா -148, இ.பவிக்ஷனஸ்ரீ-148, ந.மகிரீஷன்-147, அ.ஆர்த்தி-147, ரா.கரிஸ்ராஜ்-147, ர.வருண்-147, ச.கருணிகா-147, ம.நிகிஷன்-146, சு.தனுஸ்க்கா-146, பா.ஹரிஷயன்-146, கி.அஸ்விதா-146, மா.சானுஜன்-146, க.பிரணுகன்-146, செ.யுவிஸ்காந்-145, பி.மிருத்வி-145, செ.ஆதேஷ்-145, சி.அபிசன்-145, சு.விஹாஷன்-145, ச.கனிஷ்கா-145

### யா/பரமேஸ்வரா வித்தியாலயம், திருநெல்வேலி

வி.ஓவிஷா-165, பா.திலக்ஷன்-163, ம.அக்சயன்-161, கா.ஹரிஸ்-152, பா.தீவிகன்-150, த.அக்ஷயன்-148, த.தமிழ்பிரியன்-145

# காரைநகரில் ரூ.3 கோடி பெறுமதியான கஞ்சா மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், காரைநகரிலுள்ள பற்றைக் காடொன்றில் இருந்து 101 கிலோ 750 கிராம் நிறைகொண்ட சுமார் 3 கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சாப் பொதிகள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று அதிகாலை குறித்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(நி-5-6-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மீனவர்களை கொன்று குவிக்கும் இலங்கை அரசு

## மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம்

(சென்னை)



இந்திய கடற்பகுதியில் எல்லைத் தாண்டி வரும் இலங்கை கடற்படையினரை இந்திய அரசு பாரபட்சமின்றி சுட்டு வீழ்த்தினால் தான் இந்தியாவின் மீது இலங்கை அரசுக்கு பயம் வரும் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதன்மைச் செயலாளர் துரை வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது, எல்லை தாண்டி மீன் பிடிக்கச் சென்றதாக கூறி, பாம்பன் மீனவர்கள் 22 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தற்போது அவர்கள் விடுவிக்கப்பட்டு இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதும் கொல்லப்படுவதும் அவர்களுடைய படகுகள், மீன்பிடி வலைகள், திசைகாட்டும் கருவிகள் உள்ளிட்ட உடைமைகள் பறிக்கப்படுவதும் வாடிக்கையாக உள்ளது.

இலங்கை கடற்படையினர் மட்டுமல்லாது கடற்கொள்ளையர்கள் என்ற பெயரில் அந்த நாட்டு குண்டர்களாலும் தமிழக மீனவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றார்கள். கடந்த நாற்பது வருடங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டு இருக்கிறார்கள்.

பல்வேறு சூழல்களை கடந்து மீன்பிடிப்பதற்காக கடலுக்கு செல்லும் போது, இலங்கை கடற்படையினரின் அட்டூழியத்தால் தமிழக மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரங்களை முற்றிலும் இழந்து தவிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

இலங்கை அரசு கடும் பொருளாதார நெருக்கடியில் மூழ்கிய போது தமிழக அரசு பல கோடி ரூபாய் மதிப்பிலான உணவு, மருந்துப் பொருட்களை அனுப்பி உதவியது.

அங்குள்ள தமிழர்களுக்கு் மட்டுமல்லாது சிங்களவர்களுக்கும் மனிதாபிமான அடிப்படையில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு உதவியிருக்கிறது.

இந்திய அரசு இதுவரை 32,000 கோடி ரூபாய் இலங்கைக்கு கடனுதவி வழங்கியிருக்கிறது. மேலும் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவி செய்வதற்கும் உலக வங்கி கடன் வழங்குவதற்கும் இந்தியா சான்றிதழ் வழங்கியிருக்கிறது.

ஆனால், இலங்கை கடற்படை எந்தவித மனிதாபிமானமும் இன்றி தொடர்ந்து தமிழக மீனவர்களை கொன்று குவித்தும் கைது செய்தும் அச்சுறுத்தியும் வருவது வாடிக்கையாகி விட்டது.

பேச்சுவார்த்தை பலனளிக்கவில்லை என்றால், இந்திய கடற்பகுதியில் எல்லைத் தாண்டி வரும் இலங்கை கடற்படையினரையும் கடற்கொள்ளையர்களையும் இந்திய அரசு பாரபட்சமின்றி சுட்டு வீழ்த்த வேண்டும். அப்போது தான் இந்தியாவின் மீது இலங்கை அரசுக்கு பயம் வரும்.

தமிழர்களின் மீன்பிடி உரிமையை நிலைநாட்டவும் கச்சதீவை மீட்கவும் இந்திய அரசு இப்பிரச்சினையில் தலையிட்டு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் எனஅவர் மேலும் தெரிவித்தார். (நி-5-6)

# டெங்கு காய்ச்சலினால் இதுவரை 73,032 பேர் பாதிப்பு

## தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டின் இதுவரையான காலம் வரை டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 73 ஆயிரத்தை எட்டியுள்ளது.

இதன்படி இந்த ஆண்டில் நேற்று முன்தினம் வரை 73,032 பேர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப்பிரிவு தெரிவிக்கின்றது. டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 15,503 பேர் இந்த ஆண்டின் இதுவரையான காலம் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் 34,700 பேர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாகாண ரீதியில் நவம்பர் மாதத்தில் 4,539 பேர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இதுவே மாகாண மட்டத்தில் அதிகளவினான எண்ணிக்கை என தெரிய வருகின்றது.

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான வானிலையை அடுத்தே, டெங்கு தொற்று அதிகரித்து வருவதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

டெங்கு தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு சுகாதார பிரிவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (நி-5-6)

# சாவகச்சேரி பிரதேசசபை

## 01.01.2024 முதல் 31.12.2024 வரை மரக்கறி சந்தைகள், மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்-2024

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 21.11.2023 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 04.12.2023 வரை
அலுவலக நாட்களில் :- மு.ப 09.00 - பி.ப 3.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 05.12.2023 மு.ப 10.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 05.12.2023 மு.ப 10.30 மணி

| இல. | கேள்வி கோரப்படும் இடங்கள் | மாத வாடகை | 2024 இற்கானஆ. மீள் கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் (மீள் அளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| கச்சாய் உப அலுவலகம் | | | | | |
| 1 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1,500.00 | 968,100.00 | 100,000.00 | 1,000.00 |
| 2 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல 01 | 750.00 | 125,400.00 | 10,000.00 | 1,000.00 |
| 3 | கொடிகாமம் கருவாட்டுக்கடை இல 02 | 750.00 | 102,600.00 | 10,000.00 | 1,000.00 |
| 4 | களஞ்சிய அறை இல – 01 | 1,000.00 | 27,700.00 | 5,000.00 | 1,000.00 |
| 5 | களஞ்சிய அறை இல – 02 | 1,000.00 | 24,700.00 | 5,000.00 | 1,000.00 |
| 6 | கொடிகாமம் மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசலகூடம் மற்றும் வண்டி வாகன தரிப்பு நிலையம். | | 23,800.00 | 1,000.00 | 1,000.00 |
| வரணி உப அலுவலகம் | | | | | |
| 7 | வரணி பொதுச்சந்தை | | 52,300.00 | 5,000.00 | 1,000.00 |
| 8 | வரணி இயற்றாலை பொதுச்சந்தை | | 27,600.00 | 5,000.00 | 1,000.00 |
| 9 | வரணி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 329,700.00 | 10,000.00 | 1,000.00 |
| 10 | வரணி இயற்றாலை கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 36,600.00 | 5,000.00 | 1,000.00 |
| கைதடி உப அலுவலகம் | | | | | |
| 11 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 173,900.00 | 10,000.00 | 1,000.00 |
| 12 | கைதடி கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 203,300.00 | 10,000.00 | 1,000.00 |
| மிருசுவில் உப அலுவலகம் | | | | | |
| 13 | மிருசுவில் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 77,900.00 | 10,000.00 | 1,000.00 |
| 14 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 40,900.00 | 5,000.00 | 1,000.00 |
| 15 | மிருசுவில் பொதுச்சந்தை | | 6,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 16 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | | 47,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 17 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | | 104,500.00 | 10,000.00 | 1,000.00 |
| நாவற்குழி உப அலுவலகம் | | | | | |
| 18 | நாவற்குழி பொதுச்சந்தை | | 25,700.00 | 1,000.00 | 1,000.00 |

### நியந்தனைகள்

1. கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம், அதன் நிழற்படப்பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
2. கேள்வி கோர விரும்புவோர் கேள்வி வைப்புப் பணம், படிவக் கட்டணம் என்பவற்றைச் செலுத்துதல் வேண்டும். (வரி நீங்கலாக)
3. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை **"செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம்."** என்ற விலாசத்திற்கும், மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்."** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. 05.12.2023 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் மாத்திரம் சமுகமளிக்கலாம்.
5. அறைகள் மற்றும் கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் இயைபுடைய மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. வண்டி, வாகன தரிப்பு நிலையங்களுக்கான கட்டணமாக பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேலதிகக் கட்டணம் அறவிடமுடியாது. (துவிச்சக்கர வண்டிக்கு ரூ.10.00, மோட்டார் சைக்கிளுக்கு ரூ.20.00, முச்சக்கர வண்டிக்கு ரூ.30.00, இலகுரக வாகனங்களுக்கு ரூ.50.00 கனரக வாகனங்களுக்கு ரூ.100.00)
7. சந்தைகளில் வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்படும் எந்தவொரு விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு எவ்வித கழிவுகளும் வழங்கும் நடைமுறை அனுமதிக்கப்படமாட்டாது.
8. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் பெறுவதற்கு உரித்து இல்லை.
9. கேள்விகளை தகுந்த காரணங்களுடன் ஏற்றுக்கொள்வதற்கும் முழுமையாகவோ அல்லது பகுதியளவாகவோ நிராகரிப்பதற்குமான முழு அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
10. மேலதிக விபரங்கள், விளக்கங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை.**

**திகதி : 21.11.2023**

(C-7682)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இஸ்ரேலுக்கு எச்சரிக்கை விடுத்த பாலஸ்தீன வெளியுறவுத்துறை அமைச்சர்



(நியூயோர்க்)

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் தொடர்பில் பாலஸ்தீன வெளியுறவுத்துறை அமைச்சர் ரியாத் அல் மாலிக் ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் உரையாற்றும் போது, எச்சரிக்கை ஒன்று விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "நிர்வாகிகள் இன்றைய உரையை முடிப்பதற்குள் 60 குழந்தைகள் உட்பட 150 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு இருப்பார்கள்.

கடந்த இரு வாரங்களில் மட்டும் 5,700 இற்கும் அதிக பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 2,300 இற்கும் அதிகமானோர் குழந்தைகள், 1300 இற்கும் அதிகமானோர் பெண்கள்." ஆவார்.

"அதிகளவு அநீதி மற்றும் கொலை இஸ்ரேலை பாதுகாப்பாக மாற்றிவிடாது. ஆயுதங்கள் மற்றும் கூட்டணிகளின் எண்ணிக்கை அவர்களுக்குப் பாதுகாப்பை அளித்துவிடாது.

அமைதி மட்டுமே அவர்களுக்குப் பாதுகாப்பை கொடுக்கும். பாலஸ்தீனர்கள் மற்றும் அந்நாட்டு மக்களுடன் அமைதியாக இருப்பது மட்டுமே பாதுகாப்பை அளிக்கும்."


"இதனை அடைவதற்கு ஒரே வழி, காசா எல்லையில் பாலஸ்தீன மக்களுக்கு எதிராக துவங்கப்பட்ட இஸ்ரேலின் போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவது மட்டும் தான்.

அதிகளவிலான உயிரிழப்புகள் ஏற்பட்டால் அவற்றை மனிதாபிமான உதவிகளால் சரி செய்துவிட முடியாது. காசாவில் உள்ள எங்களது மக்களின் மீது அழிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது." என்று தெரிவித்துள்ளார். (நி-5-6)

## துருக்கியின் சரக்குக் கப்பல் மாயம்

(அங்காரா)

துருக்கியில் புயலுக்கு மத்தியில் 12 பணியாளர்களுடன் கருங்கடல் கடற்கரையில் சென்றுக் கொண்டிருந்த துருக்கியின் சரக்குக் கப்பல் மாயமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



இந்நிலையில் கடலில் மாயமான கப்பலை தொடர்பு கொள்ள முடியவில்லை என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வடமேற்கு துருக்கியின் சோங்குல்டாக் மாகாணத்தில் உள்ள எரெக்லியில் கப்பல் நகர்ந்து கொண்டிருந்ததாக துருக்கி கொடியிடப்பட்ட காஃப்கமெட்லர் கப்பலின் கேப்டன் தெரிவித்ததாக மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இப்பகுதி சக்தி வாய்ந்த புயல்களால் பாதிக்கப்பட்டதால், மோசமான வானிலை, காற்று காரணமாக கப்பலை தேடும் பணி சவாலாக உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதனால், கப்பலை தேடும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டு உள்ளதாகவும் வானிலை சற்று தெளிவான பிறகு மீட்பு நடவடிக்கை தொடங்க குழுக்கள் தயாராக இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. (நி-5)

## விசாகப்பட்டிணம் துறைமுகத்தில் பாரிய தீ விபத்து

### 50 படகுகள் எரிந்து நாசம்

(டில்லி)

இந்தியாவின் விசாகப் பட்டிணம் துறைமுகத்தில் ஏற்பட்ட தீப்பரவலில் 50 இற்கும் மேற்பட்ட மீன்பிடிப் படகுகள் வரை தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீக்கிரையான படகுகளுக்கு நான்கு தொடக்கம் 5 கோடி ரூபாய் வரை செலவாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

படகுகளில் காணப்பட்ட டீசல் மற்றும் எரிவாயு கொள்கலன்கள் மூலம் தீ வேகமாக பரவியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (நி-5-6)



## ஆர்ஜென்டினாவின் புதிய ஜனாதிபதியாக ஜேவியர் மில்லே



(புவேனோஸ்ஐரேஸ்)

ஆர்ஜென்டினாவின் புதிய ஜனாதிபதியாக ஜேவியர் மில்லே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆர்ஜென்டினாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின்படி அவர் 56% வாக்குகளைப் பெற்று புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஜேவியர் மில்லேவின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். (நி-5-6)

## உலகளாவிய நலனுக்காக ஒன்றுபடும் நேரம் இது

### இந்தியப் பிரதமர் மோடி

(டில்லி)

இஸ்ரேல் - ஹமாஸ் போரில் பொதுமக்கள் கொல்லப்படுவது அதிகரித்துள்ளமைக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி கண்டனம் தெரிவித்துள்ளார்.




இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர் காணலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

போர் குறித்த பேச்சுவார்த்தை மற்றும் இராஜதந்திர செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதாகவும் பாலஸ்தீன மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்பியுள்ளதாகவும் இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

உலகளாவிய நலனுக்காக தெற்குலக நாடுகள் ஒன்றுபட வேண்டிய நேரம் இதுவென என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5-6)

## போர் இ...

### சர்வதேச ...



கடந்த ஒக்டோபர் 7 அன்று பாலஸ்தீனத்தை மையமாகக் கொண்ட ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தி 1200 இற்கும் மேற்பட்டவர்களைக் கொன்று, 200 இற்கும் மேற்பட்டவர்களை பணயக் கைதிகளாகக் கடத்திச் சென்றனர்.

இதைத் தொடர்ந்து இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழிக்கப் போவதாக உறுதி எடுத்து அவர்கள் ஒளிந்திருக்கும் காசா பகுதி மீது தரைவழி மற்றும் வான் வழியாக

(வ... நிறு... அ... ஜன...)

தொடர் த... வருகிறத... ஈரான்... பியா, ... கத்தார் ... நாடுகள் ... நிலைை... அதேநே... இங்கில... ன்ஸ், ... மேற்கத்... ரேல் ஆ... த்துள்ள... நாள் தீவ... வருகிறத... போரை ... இடைநிறு... இஸ்ரே...

## ஹமாஸ் அமை...

### புதிய தடை விதி...



(கன்பரா)

ஹமாஸ் அமைப்பிற்கு எதிரான புதிய தடைகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஹமா... பட்ட எட்... அமைப்ப... தடைகள... அவுஸ்தி...

## இஸ்ரேல் கப்ப...

### ஹௌத்தி கி...

(சனா)

செங்கடல் பகுதியில் இஸ்ரேலின் கப்பல் ஒன்றினை ஏமனின் ஹௌத்தி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளதாக

சர்வதே... கின்றன... இஸ... வருக்... வீடர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிறுத்தம் சாத்தியமற்றது!

## நச கோரிக்கையை புறக்கணிக்கும் பைடன்

(வோஷிங்டன்)

**ஹமாஸ் அமைப்பினர் மனிதாபிமானமற்ற செயல்களை நிறுத்தாத வரையில் போர் இடைநிறுத்தம் என்பது அமைதிக்கான வழியாக இருக்காது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சுட்டிக்காட்டியுள்ளார்.**



தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

ஈரான், ஈராக், சவுதிஅரேபியா, ஏமன், லெபனான், கத்தார் உள்ளிட்ட சில அரபு நாடுகள் ஹமாஸ் ஆதரவு நிலையை எடுத்துள்ளன. அதேநேரம் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் இஸ்ரேல் ஆதரவு நிலையை எடுத்துள்ளன. போர் நாளுக்கு நாள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக போரை தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யுமாறு இஸ்ரேலுக்கு பல உலக நாடுகளும் ஐ.நா மற்றும் உலக சுகாதார அமைப்புகளும் கோரிக்கை விடுத்து வருகின்றன.

ஆனால், இஸ்ரேல் அக்கோரிக்கைகளை புறக்கணித்து வருகிறது. இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேல்-ஹமாஸ் போர் இடைநிறுத்தம் குறித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது,

"போர் நிறுத்தம் வேண்டும் என பலர் கூறி வருகின்றனர். ஹமாஸ் அமைப்பினரின் மனிதாபிமான மற்ற செயல்களை நிறுத்தாத வரையில் போர் இடைநிறுத்தம் என்பது அமைதிக்கான வழியாக இருக்காது என அவர் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பினருக்கு ஒவ்வொரு போர் இடைநிறுத்த காலமும் தங்கள் இராணுவ தளபாடங்களையும் திட்டங்களுக்கான ஆயுதங்களையும் சேகரித்து வைத்து கொள்ளும் காலமாக உள்ளது.

தங்கள் அமைப்பினரை பலம் பெறச் செய்து மீண்டும் அப்பாவிகளை கொல்ல தொடங்குவார்கள்.

தற்காலிகமாக போரை நிறுத்துவது நமது நோக்கமாக இருக்கக்கூடாது. நிரந்தரமாக இதை முடிவுக்குக் கொண்டு வருவதே நோக்கமாக இருக்க வேண்டும். தொடர்ந்து நடைபெறும் வன்முறைக்கு ஒரு முடிவு வர வேண்டும்.

அத்துடன் வரலாற்று தவறுகள் மீண்டும் நடைபெறாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இஸ்ரேலும் மனிதாபிமான சட்டங்களை மதித்து, பொதுமக்களின் உயிரிழப்பை குறைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

தங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலால் மனதில் ஏற்பட்டுள்ள காயத்தையும் பதிலடி கொடுக்க வேண்டிய கோபத்தையும் நிதானமாக வெளிப்படுத்தி தவறுகள் நடக்காமல் இஸ்ரேல் பார்த்து கொள்ள வேண்டும்.

போர் நிறைவடை ந்ததும், பாலஸ்தீனம் இரு நாடுகளாக பிரிக்கப்படுவது தான் இந்த சிக்கலுக்கு தீர்வு" என கூறியுள்ளார். (நி-5-6)

## அமைப்பிற்கு எதிராக விதித்த அவுஸ்திரேலியா



ஹமாஸுடன் தொடர்புபட்ட எட்டு நபர்கள் மற்றும் அமைப்புகளிற்கு எதிராக தடைகளை விதிக்கவுள்ள தாக அவுஸ்திரேலிய வெளி விவகார அமைச்சர் பெனி வொங் தெரிவித்துள்ளார்.

இந்த தடைகள் விதிக்கப்பட்ட நபர்கள் பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்பதை வெளிப்படுத்துகின்றது என பெனி வொங் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் 2001 இல் முதல் தடவை ஹமாசிற்கு எதிராக தடைகளை விதித்திருந்தது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் புதிய தடைகளை அவுஸ்திரேலியாவின் சியோனிஸ்ட் சம்மேளனம் வரவேற்றுள்ளது. (நி-5-6)


## ஏவப்பட்ட சில நிமிடங்களில் கடலில் வீழ்ந்த ரொக்கெட்

(மெக்சிக்கோ)

எலான் மஸ்க்கின் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் ஏவிய ஸ்டார்ஷிப் ரொக்கெட் மீண்டும் தோல்வியடைந்து ள்ளது.

ஸ்பேஸ் எக்ஸ் நிறு வனம் ஸ்டார்ஷிப் ரொக் கெட்டை 7 மாதங்களுக்கு முன் முதல்கட்ட சோதனை நடத்தியபோது அந்த முய ற்சி தோல்வியில் முடிந்த நிலையில் மீண்டும் ரொக்கெட்டை ஏவும் சோதனை நடைபெற்றது.

டெக்சாசில் உள்ள போகோசிகா ஏவுதளத்தில் இருந்து ஏவப்பட்ட ஸ்டார் ஷிப் ரொக்கெட்டின் பூஸ்டர் விண்ணில் ஏவப்பட்ட சற்று நேரத்தில் வெடித்து சிதறி மெக்சிக்கோ வளைகுடாவில் விழுந்துள்ளது. (நி-5-6)




## கப்பல்களை குறிவைக்கும் தி கிளர்ச்சியாளர்கள்

சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேலிய வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான கலக்ஸி லீடர் கப்பலை கைப்பற்றிய தாகவும் அதில் 22 பேர் காணப்பட்டதாக கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

துருக்கியிலிருந்து இந்தியாவிற்கு சென்று கொண்டிருந்த




கப்பலையே ஹௌத்தி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

இஸ்ரேல் போன்ற நாடுகளிற்காக பணியாற்ற வேண்டாம் என சர்வதேச மாலுமிகளை ஹௌத்தி கிளர்ச்சியாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமைகளை பொறுப்பேற்றார் பாலித

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால நேற்று காலை தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் முன்னதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றியதோடு சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய ஜனக ஸ்ரீ சந்திரகுப்த ஓய்வு பெற்றுள்ள நிலையில் விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால கடந்த 17 ஆம் திகதி புதிய செயலாளராக நியமிக்கப்பட்டார். (நி-5-6)



# வரவு- செலவுத் திட்டத்தில் நடைமுறைக்கு மாறான விடயங்கள்

## நாமல் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வரவு -செலவுத் திட்ட ஆவணத்தில் நடைமுறைக்கு மாறான பல விடயங்கள் காணப்படுவதாக பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த வரவு -செலவுத் திட்டத்தில் ஒரு படி முனனேறினால் பிரச்சினை இல்லை என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், கடந்த வரவு -செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்படாத விடயங்களை மீண்டும் முன்வைத்தால் பிரச்சினை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.




உள்ளாட்சி நிறுவனங்களை விற்பதற்கு அப்பால் வரி அதிகரிப்பு, உள்ளூர் கடன் பெறுதல், கிராமத்தில் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற விடயங்கள் வரவு- செலவுத் திட்டத்தில் உள்ளதா? இல்லையா? என்ற பிரச்சினை இருப்பதாக நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார். (நி-5-6)

# இலங்கை வந்துள்ள 'பசுபிக்'

(கொழும்பு)

பசுபிக் வேர்ல்ட் என்ற அதி சொகுசு பயணிகள் கப்பல் நேற்று அதிகாலை கொழும்பு துறை முகத்தை வந்தடைந்தது.

இந்த கப்பல் 1691 பயணிகள் மற்றும் 704 பணியாளர்களுடன் எகிப்தில் இருந்து வருகை தந்துள்ளது.இங்கு ஜப்பானிய மற்றும் சீன பயணிகள் அதிகம் இருப் பதால் அவர்கள் கொழும்பு, காலி மற்றும் கண்டிக்கு செல்ல உள்ளனர்.(நி-5-6)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 350 | 350 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 500 | 500 |
| தக்காளி | 350 | 380 | 380 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 100 | 160 | 150 |
| கோவா | 350 | 300 | 300 | 400 |
| கரட் | 350 | 400 | 450 | 450 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 250 | 250 | 200 | 250 |
| வாழைக்காய் | 200 | 200 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 350 | 500 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 600 | 600 | 500 | 500 |
| வெண்டைக்காய் | 300 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 150 | 100 | 140 | 150 |
| பயற்றங்காய் | 600 | 600 | 800 | 500 |
| லீக்ஸ் | 250 | 260 | 240 | 350 |
| பீற்றூட் | 250 | 240 | 200 | 300 |
| கறிமிளகாய் | 600 | 800 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 450 | 700 | 400 | 600 |
| போஞ்சி | 450 | 600 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | 350 | 280 |
| கீரை - 1 பிடி | 150 | 80 | 150 | 150 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1400 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 85 | 70-90 |
| இராசவள்ளி | 450 | 450 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 400 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 180 | -- | 300 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 120 | 60 |
| வல்லாரை | 40 | 180 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | 200 | -- | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2971

வந்தனா




கம்சாயினி




விஜயந்தினி




சாரங்கன்




கார்த்திக்




திலுக்சன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பிரதேசசபை
## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்-2024

2024 ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவைகள் வழங்குவதற்கு பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள் உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 21.12.2023 வரை அலுவலக நாட்களில் விண்ணப்பப்படிவங்களை ரூபா 2,000.00 மற்றும் பொருத்தமான வரிகளை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு விண்ணப்பப்படிவமும் அத் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

தொகுதிகள்
தொகுதி "A" - பொருட்களை வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள்
தொகுதி "C" - வாகனத்திருத்தமும் சேர்விஸ் செய்தலும்
தொகுதி "D" - ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்

| | |
|---|---|
| | **பொருட்களை வழங்குதல் (பொது)** |
| A1 | காகிதாதிகள், எழுதுபொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள். |
| A2 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம் /உருக்கு). |
| A3 | கணனிகள் மற்றும் கணனியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய ரோணர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள். |
| A4 | கேட்டின், யன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணிவகைகள். |
| A5 | நீர்க்குழாய்கள் குழாய் இணைப்புகள் மற்றும் அதனோடு இணைந்த பொருட்கள். |
| A6 | கட்டட இரும்பு பொருட்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் ஹாட்வெயர் பொருட்கள். |
| A7 | மின்சார பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின் மோட்டர்கள், மின்குமிழ்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருட்கள், |
| A8 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை. |
| A9 | மோட்டர் வாகன உதிரிப்பாகங்கள், ரயர், ரியூப் மற்றும் ஏனையவை. |
| A10 | தோல் உற்பத்திப் பொருட்கள், சப்பாத்துக்கள், மழைக்கவசம். |
| A11 | இறப்பர் முத்திரைகள். |
| A12 | நூலகங்களுக்கான நூல்கள். |
| A13 | விளையாட்டு உபகரணங்கள். |
| | **பொருட்கள் வழங்குதல் (மருத்துவம்)** |
| A14 | சித்த மருத்துவ மருந்துகள். |
| A15 | மருத்துவ உபகரணங்கள். |
| | **சேவை விபரம்** |
| B1 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் செய்தல். |
| B2 | மின் உபகரணங்கள் திருத்தம் செய்தல். (தொலைநகல் இயந்திரம், நிழற்பட இயந்திரம்.) |
| B3 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம், மின் விசிறிகள், ஜெனரேற்றர்கள் திருத்துதலும் மீள முறுக்குதலும் |
| B4 | பதிப்பக வேலை - சகல வித படிவங்கள் - ஏனையவை. |
| B5 | கட்டட திருத்த வேலை, உள்ளக தொலைபேசி பராமரித்தல். |
| B6 | வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல், உலோக வேலைகள். |
| B7 | கணினிகள் பழுது பார்த்தலும், சேர்விஸ் செய்தலும். |
| B8 | JCB மற்றும் டிப்பர் வாகனங்களின் சேவைகள். |
| B9 | மொழிபெயர்ப்பாளர்கள் சேவை. |
| B10 | கட்டட கலைஞர்கள் சேவை. |
| B11 | நில அளவையாளர்கள் சேவை. |
| | **வாகனத்திருத்தமும் சேர்விஸ் செய்தலும்** |
| C1 | சகல விதமான வாகன திருத்தமும், வாகன உட்பக்கம், சீற்கவர் என்பவற்றுக்கான குசன் வேலைகள். |
| C2 | சகல விதமான வாகனங்களும் சுத்திகரிப்பு செய்தல். |
| | **ஒப்பந்தகாரர் பதிவு செய்தல்** |
| D1 | கட்டட நிர்மாணம் மற்றும் அதனுடன் இணைந்த வேலைகள். |
| D2 | வீதி செப்பனிடல் மற்றும் அதனுடன் இணைந்த வேலைகள். |

**நிபந்தனைகள்**

1. வழங்கல்கள் / சேவைகள் 2024 ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. ஒவ்வொரு தொகுதியினது ஒவ்வொரு தொடரிலக்கமிடப்பட்ட உருப்படிகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு தனித்தனியான கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.
3. பதிவு செய்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவை ஏற்படின் அதற்கு புறம்பான வழங்குநர்களிடமும் விலைமனுக்களை கோரி உரிய நடைமுறைகளின் பிரகாரம் கொள்வனவு செய்யும் உரிமையும் பிரதேசசபைக்கு உண்டு.
4. பதிவு செய்யும் நிறுவனங்கள் நிலையான தொலைபேசி இணைப்புடன் நிறுவனம் அமைந்துள்ள இடத்தையும் உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
5. ஒப்பந்ததாரர்களை பதிவு செய்யும்போது பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
   - இக்ராட் பதிவு உடையவராக இருத்தல்.
   - பதிவின் போது இக்ராட் பதிவு புத்தகம் சமர்ப்பிக்க வேண்டும்.
   - பதிவின் போது இக்ராட் பதிவுத்திகதி காலாவதியற்றதாக இருத்தல் வேண்டும்.
   - செய்யப்பட்ட வேலைகளின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.
6. திருப்திகரமற்ற வழங்கல்/சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் பதிவினை நிராகரிக்க அல்லது இரத்துச்செய்ய பிரதேசசபை செயலாளருக்கு அதிகாரமுண்டு.
7. விண்ணப்பங்களை கடித உறையின் இடதுபக்க மூலையில் வழங்கல். சேவைகளிற்கான விண்ணப்பம் - 2024 எனக் குறிப்பிட்டு **செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி கொடிகாமம்** என்னும் முகவரிக்கு 21.12.2023 ஆம் திகதிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்கப்படவேண்டும்.
8. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 021 205 0356 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**திரு.க.சந்திரகுமார்,**
**செயலாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை.**

(C-7683)

2023.11.21

# புதைகுழி அகழ்வில் வீதிக்கு அடியிலும் எச்சங்கள் இருக்கக்கூடும்
## சுமந்திரன் எம்.பி

(நெளுக்குளம்)

வீதிக்கு குறுக்காகவும், வீதிக்கு அடியிலும் கூட சில வேளை மனித எச்சங்கள் இருக்கக் கூடும் என்ற சந்தேகமும் ஏற்பட்டிருக்கின்றது என ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணி ஆரம்பிக்கும் இடத்தினை நேற்று பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், கொக்கு தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணியானது மீளவும் நேற்று ஆரம்பமான நிலையில் தற்போது விடுவிக்கப்பட்டிருக்கின்ற நிதியினை வைத்து இன்னும் இரண்டு வாரங்களுக்கு அகழ்வை மேற்கொள்ள முடியும் என கூறியிருக்கிறார்கள்.

இது பல்வேறு தளங்களிலே உடல்கள் காணப்படுகின்ற காரணத்தினாலே நீண்ட காலமாக இதனை செய்வதற்கான தேவை ஏற்பட்டிருப்பதனை தற்போது உணர்ந்திருக்கின்றார்கள். அது ஒரு பக்கம் இருக்க வீதிக்கு குறுக்காகவும், வீதிக்கு அடியிலும் கூட சில வேளை மனித எச்சங்கள் இருக்க கூடும் என்ற சந்தேகமும் ஏற்பட்டிருக்கின்றது.

தற்போது 17 உடலங்கள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இதனை விட கூடுதலான எண்ணிக்கை இருக்கும் என்பது தெளிவாக தெரிகின்றது. மேலும் அதற்கு சில நாட்கள் எடுக்கும் என தெரிவித்தார்.

(நி-5-6-299)




அகில இலங்கை பரதநாட்டியப் போட்டியில் புலியாட்ட நிகழ்வில் யா/குப்பிழான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

# கருத்தாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சமூக ஒன்றிணைப்பை ஏற்படுத்துவதில் காணப்படும் தடைகளைக் களைதல், ஒற்றுமைக்கான வழிகளை மேம்படுத்தல் தொடர்பில் மகளிர் அபிவிருத்தி நிலையம் கருத்தாடல் ஒன்றினை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ராஜா கிறீம் கவுஸ் மண்டபத்தில் நடத்தவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். மனித உரிமைகள் இணைப்பாளர் ரீ.கனகராஜ் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (நி-5-6)



அகில இலங்கை பரதநாட்டியப் (சுதந்திரம் புத்தாக்க நடன நிகழ்வு) போட்டியில் யா/சில்லாலை றோ.க.த.க பாடசாலை தேசிய மட்டத்தில் முதல் இடத்தினைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

# தேசிய மட்டப் போட்டிகளில் யா/முத்துத்தம்பி மகாவித்.சாதனை

(யாழ்ப்பாணம்)

தேசிய மட்ட பரத நாட்டிய கர்நாடக சங்கீதப் போட்டிகளில் யா/முத்துத் தம்பி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்ல மாணவிகள் சாதனை படைத்துள்ளனர்.

அநுராதபுரத்தில் நடைபெற்று முடிந்த தேசிய மட்டப் போட்டிகளில் யா/முத்துத் தம்பி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் சைவச் சிறுவர் இல்ல மாணவிகள் வில்லுப்பாட்டில் 1 ஆம் இடத்தினையும் பல்லியம்-1 ஆம் இடத்தினையும், கொழுந்து நடனத்தில் - 1 ஆம் இடம் மற்றும் தனி வாத்தியம் (வீணை) - செல்வி யோ.கிருஷ்ணவேணி 2 ஆம் இடத்தையும் ஆகியோர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 334





அப்போது "மதுரை கொண்ட கோஇராஜகேசரி சுந்தர சோழ சக்கரவர்த்தி வாழ்க வாழ்க!" என்று ஆயிரமாயிரம் குரல்களில் எழுந்த ஒலி எட்டுத் திசையும் பரவியது. அந்தக் குரல் ஒலியுடன் போட்டியிட்டுக் கொண்டு நூறு அறப்பறைகளின் முழக்கம் எழுந்து வானை அளாவியது.

பின்னர் வரிசைக்கிரமமாக "இளையபிராட்டி குந்தவை தேவி வாழ்க!" "வீர பாண்டியன் தலைகொண்ட வீராதி வீரர் ஆதித்த கரிகாலர் வாழ்க!" "ஈழங் கொண்ட இளவரசர் அருள மொழிவர்மர் வாழ்க!" "சிவஞான கண்டராதித்தரின் தவப்புதல்வர் மதுராந்தகத் தேவர் வாழ்க!" என்றெல்லாம் கோஷங்களும் பிரதி கோஷங்களும் எழுந்தன.

கடைசியில், "தனாதி காரி, தானிய பண்டாரத் தலைவர், இறைவிதிக்கும் தேவர், பெரிய பழுவேட்டரையர் வாழ்க!" "தஞ்சைக் கோட்டைத் தலைவர் சின்னப் பழுவேட்டரையர் காலாந்தகண்டர் வாழ்க!" என்ற கோஷங்கள் எழுந்தபோது, ஒலியின் அளவு பெரிதும் குறைந்து விட்டது.

பழுவூர் வீரர்கள் மட்டும் அக்கோஷங்களைச் செய்தார்களே தவிரக் கூடியிருந்த பொது மக்கள் அதிகமாக அதில் சேர்ந்து கொள்ளவில்லை. அப்போது பழுவூர் இளையராணியின் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று குந்தவைப் பிராட்டி முயற்சி செய்தும் பலிக்கவில்லை. முக்கியமாக ஆதித்த கரிகாலரைப் பற்றி வாழ்த்தொலி எழுந்த சமயத்தில் நந்தினியின் முகத்தைப் பார்த்திருந்தால், இரும்பு நெஞ்சு படைத்த இளைய பிராட்டி கூடப் பெரிதும் திகில் கொண்டிருப்பாள் என்பதில் ஐயம் இல்லை.

## பத்தொன்பதாம் அத்தியாயம்
## "ஒற்றன் பிடிபட்டான்!"

அன்று நடந்த சம்பவங்கள் பெரிய பழுவேட்டரையருக்கு மிக்க எரிச்சலை உண்டு பண்ணியிருந்தன. சக்கரவர்த்தியிடமும் அவருடைய குடும்பத்தாரிடமும் மக்கள் கொண்டிருந்த விசுவாசத்தை வெளிப்படுத்திக் காட்டுவதற்கல்லவா அது ஒரு சந்தர்ப்பமாகப் போய்விட்டது? "ஜனங்களாம் ஜனங்கள்! அறிவற்ற ஆடுமாடுகள்! நாலு பேர் எந்த வழி போகிறார்களோ அதே வழியில் நாலாயிரம் பேரும் போவார்கள்! சுய அறிவைப் பயன்படுத்திக் கொள்ள எத்தனை பேருக்குத் தெரிகிறது?" என்று தமக்குள் அடிக்கடி சொல்லிக் கொண்டு பொருமினார்.

"சக்கரவர்த்தி சொர்க்கத்துக்குப் போவதற்குள்ளே சாம்ராஜ்யத்தைப் பாழாக்கி விட்டுத்தான் போவார் போலிருக்கிறது! 'இந்த ஊருக்கு வரியைத் தள்ளிவிடு!', 'அந்தக் கிராமத்தை இறையிலிக் கிராமமாகச் செய்துவிடு!' என்று கட்டளையிட்டுக் கொண்டே போகிறார்! கொஞ்சக் காலத்துக் கெல்லாம் வரி கொடுக்கும் கிராமமே இல்லாமற் போய்விடும். ஆனால் போர்க் களத்துக்கு மட்டும் செலவுக்குப் பணமும் உணவுக்குத் தானியமும் அனுப்பிக் கொண்டேயிருக்க வேண்டும். எங்கிருந்து அனுப்புவது?" என்று அவர் இரைந்து கத்தியதைக் கேட்டு அவருடைய பணியாட்களே சிறிது பயப்பட்டார்கள்.

"அண்ணா! இப்படியெல்லாம் சத்தம் போடுவதில் என்ன பயன்? காலம் வரும் வரையில் காத்திருந்து காரியத்தில் காட்ட வேண்டும்!" என்று சின்னப் பழுவேட்டரையர் அவருக்குப் பொறுமை போதிக்க வேண்டியிருந்தது.

குந்தவை தம் அரண்மனைக்கு வரப்போகிறாள் என்று தெரிந்ததும் பெரியவரின் எரிச்சல் அளவு கடந்துவிட்டது. நந்தினியிடம் சென்று, "இது என்ன நான் கேள்விப்படுவது? அந்த அரக்கி இங்கு எதற்காக வரவேண்டும்? அவளை நீ அழைத்திருக்கிறாயாமே? அவள் உன்னை அவமானப் படுத்தியதையெல்லாம் மறந்துவிட்டாயா?" என்று கேட்டார்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## சிறிய தவறும் பெரிய தண்டனையும்



அக்பர் சக்கரவர்த்திக்கு வெற்றிலை போடும் பழக்கம் இருந்தது. அதிலும் குறிப்பாக, சௌகத் அலி தயாரிக்கும் பீடா அவருக்கு மிகவும் பிடிக்கும். அவன் தயாரிக்கும் பீடா மிகப் பிரமாதமாக இருப்பதாக அக்பர் அடிக்கடி அவனிடமே புகழ்ந்து பேசுவதுண்டு! அந்த சமயங்களில் சௌகத் அலி அக்பருக்கு சலாம் செய்து விட்டு, "பீடா தயாரிப்பது எனக்கு கை வந்த கலை! என்னுடைய எட்டாவது வயது முதல் இந்தத் தொழிலை நான் செய்து கொண்டு இருக்கிறேன். சக்கரவர்த்தியான உங்களுக்கு நான் பீடா தயாரித்து கொடுப்பதை பெரும் பாக்கியமாக நினைக்கிறேன்" என்றான்.

அக்பர் அன்றுமுதல் தான் எங்கு சென்றாலும் தன்னுடன் சௌகத் அலியையும் உடன் அழைத்துச் செல்லத் தொடங்கினார். இவ்வாறு மூன்றாண்டுகள் கழிந்தன!

ஒருநாள் அலி பீடாவில் கை தவறி சிறிது அதிகமாக சுண்ணாம்பினைக் கலந்து விட்டான். அதைத்தின்ற அக்பரின் நாக்கு வெந்து விட்டது. உடனே பீடாவைத் துப்பியவாறே, "முட்டாள்! உன்னுடைய பீடாவைத் தின்று என் நாக்கு வெந்து விட்டது. பீடா தயாரிப்பதில் தலைசிறந்தவன் என்று ஓயாமல் பெருமையடித்துக் கொண்டாயே! இதுவா நீ தயாரிக்கும் லட்சணம்?" என்று சீறினார்.

அலி பயத்தினால் மிகவும் நடுங்க ஆரம்பித்து விட்டான். மிகக் கோபத்துடன் அவனை முறைத்துப்பார்த்தவாறே, "உடனே சென்று ஒரு பை நிறைய சுண்ணாம்பு கொண்டு வா!" என்று கட்டளையிட்டார். அலி கடைக்குப்போய் ஒரு பை நிறைய சுண்ணாம்பு வாங்கினான். அப்போது அங்கே வந்த மகேஷ்தாஸ் "அலி! என்ன விடயம்? எதற்கு இத்தனை சுண்ணாம்பு?" என்று கேட்டான்.

"இதை சக்கரவர்த்தி வாங்கி வரச்சொன்னார். ஏன் என்று எனக்குத் தெரியவில்லை!" என்றான் அலி. "தெரியவில்லையா? எந்த சந்தர்ப்பத்தில் இதை வாங்கச் சொன்னார்?" என்று மகேஷ் கேட்க, அலியும் நடந்ததைக் கூறினான்.

சக்கரவர்த்தி எதற்காக ஒரு பை நிறைய சுண்ணாம்பு வாங்கச் சொன்னார் என்று மகேசுக்குப் புரிந்து விட்டது. உடனே அவன் அலியிடம், "வயிறு நிறைய நெய் குடித்து விட்டு சக்கரவர்த்தியிடம் செல்!" என்றான்.

"என்னப்பா! ஏற்கெனவே நான் யானைக் குட்டி போல் பருமனாக இருக்கிறேன். இந்த லட்சணத்தில் நான் வயிறு நிறைய நெய் தின்றால் பூதம் போல் ஆகிவிடுவேன்!" என்றான் அலி!

"இன்று ஒருநாள் மட்டும் செய்" என்று சொல்லிவிட்டு மகேஷ் சென்று விட்டான்.

மகேஷ் சொன்னால் அதில் ஏதோ காரணம் இருக்கும் என்று நம்பிய அலி, வீட்டிற்குச் சென்று ஒரு செம்பு நிறைய நெய் எடுத்து வயிறு முட்ட குடித்த பிறகு அவன் அக்பரை நாடிப் போனான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை என்பது சூரியனைப் போன்றது, அதன் பிரகாசத்தை சதா வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும். – பிரம்மா குமாரிகள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேசத் துரோகிகளாக முத்திரை குத்தப்பட்டுள்ளது

விடுதலைப் புலிகளை இல்லாமல் செய்து இந்த நாட்டைக் காப்பாற்றினோம் என்று மார்தட்டிய ராஜபக்ஷக்கள் இந்த நாட்டை கந்தறுத்து விட்டனர். அவர்கள் குற்றவாளிகள் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதைப் பார்த்தபோது தெய்வம் நின்றறுக்கும் என்ற தத்துவத்தைப் புரிந்து கொண்டோம்.

ஆம், விடுதலைப் புலிகளுடன் போர் தொடுப்பதாகக் கூறிக்கொண்டு அப்பாவித் தமிழ் மக்களின் தலைகளில் குண்டுகளைப் போட்டு தமிழினத்தையே அழிக்கத் திட்டமிட்ட மகிந்த ராஜபக்ஷ தரப்பு சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்களை முட்கம்பி வேலிக்குள் அடைத்து மிகப்பெரும் கொடுமையை அரங்கேற்றியது.

அதுமட்டுமல்லாமல் தமிழ் மக்களைக் கொன்று குவித்ததை, அவர்களின் சொத்துக்களை அழித்தொழித்ததைப் போர் வெற்றியாகப் பிரகடனம் செய்து காலிமுகத்திடலில் வெற்றி விழாக் கொண்டாடினர்.

அந்தோ! தங்கள் பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்கள், பெற்றோர்களைப் பறிகொடுத்த பிள்ளைகள் தலையில் கைவைத்து கதறி அழும் போது திமிர்த்தனம் கொண்டு வெற்றி விழா நடத்திய அதே மகிந்த ராஜபக்ஷக்களை இந்த நாட்டு மக்கள் ஓடோடத் துரத்தியதை இந்த நாட்டின் வரலாறு பேசிக் கொண்டே இருக்கும்.

சிலவேளைகளில் எங்களுக்கு எதிராக சிங்கள மக்கள் புரட்சி செய்யவில்லை. அது வெளிநாடுகளின் சதி என்று ராஜபக்ஷக்கள் கூறி மழுப்பலாம்.

அவ்வாறானதொரு நிலைமை ஏற்படக் கூடாது எனக் கடவுள் கருதினன் போலும் உயர் நீதிமன்றம் மகிந்த ராஜபக்ஷக்களை குற்றவாளிகளாக உறுதி செய்து தீர்ப்பளித்துள்ளது.

ஆம், இந்த நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்துக்குள் வீழ்த்தியவர்கள் மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ. எனவே இவர்கள் குற்றவாளிகள் என உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு எந்தக் காலத்திலும் அழித்து எழுதப் படக்கூடியதன்று.

தவிர, இந்த நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணம் மகிந்த ராஜபக்ஷ தரப்பு எனும்போது, அதற்குள் தேசத்துக்கு துரோகம் இழைத்த குற்றம் வெளிப்படுவதை நாம் அவதானித்தாக வேண்டும்.

அதனாலேயே ராஜபக்ஷக்களைத் தூக்கிலிட வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆம், மகிந்த ராஜபக்ஷக்கள் குற்றவாளிகள் என்ற உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்குள் அவர்களை ஓடோடத் துரத்திய மக்களின் செயல் நியாயப்படுத்தப்பட்டுள்ளதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆக, மகிந்த ராஜபக்ஷக்களைத் தூக்கிலிட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோசம் போடுவதற்குள் அவர்கள் தேசத் துரோகிகள் என்ற முத்திரை குத்தப்பட்டுள்ளமை புரிதற்குரியது.

# ஒட்டு மொத்த பாராளுமன்றமும் நாடு வங்குரோத்து அடைந்தமைக்கான பொறுப்பை ஏற்க வேண்டும் - நாமல் எம்.பி

(கொழும்பு)

நாடு வங்குரோத்து அடைந்தமைக்கான பொறுப்பை ஒரு குழுவினர் அன்றி ஒட்டுமொத்த பாராளுமன்றமும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், அரசமைப்பிற்கு இணங்க அரசாங்கத்தின் கொள்கையொன்றை உயர்நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்த முடியுமா என கேள்வி எழுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்று பாராளுமன்றில் சமர்ப்பித்து, விவாதம் செய்து, பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றியே அரசாங்கம் கொள்கைகளை தயாரிக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

எனவே, அரசமைப்பின் 29 ஆவது திருத்தச் சட்டத்தை பாதுகாக்கப் போகிறோமா அல்லது அதனை சவாலுக்கு உட்படுத்தப் போகிறோமா என்பதை தீர்மானிக்க வேண்டும் என கூறியுள்ளார்.

நீதிமன்ற தீர்ப்புக்களை மதிப்பதாகவும் இது தொடர்பாக சட்ட ஆலோசனைகளை பெற்று வருவதாக தெரிவித்த நாமல் ராஜபக்ஷ நீதிமன்றங்கள் சுயாதீனமாக செயற்பட வேண்டும் என்பதை தாமும் ஏற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார். (ம-7)

# முல்லை புதைகுழி விடயத்தில் அரசு மெத்தனப் போக்கு

## ரவிகரன் குற்றச்சாட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மனித புதைகுழி விடயத்தில் அரசாங்கம் மெத்தன போக்கினை காட்டுகிறது என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நேற்று கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணி ஆரம்பிக்கும் இடத்தினை பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கொக்கு தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு பணியானது நீண்ட இடைவெளிக்கு பின்பு அடுத்த கட்டமாக இடம்பெறுகின்றது.

அரசாங்கமானது நினைத்தால் நிச்சயமாக இந்த உடலங்கள் சம்பந்தப்பட்ட ஒரு தெளிவான அறிக்கையை தரலாம் ஆனால் அகழ்வு பணியினை மேற்கொண்டு முடிவுகளை சரியான வழியிலே செய்ய வேண்டும் என்று ஏனையவர்கள் கோரிக்கை விடுமளவிற்கு அரசாங்கம் அந்த நடவடிக்கையில் மெத்தன போக்கினை காட்டுவது போல் தெரிகின்றது.

இன்றும் முதலில் நம்பிக்கை இருக்கவில்லை. இருந்தாலும் அதன் பணியில் ஈடுபடும் உத்தியோகத்தர்களால் குறித்த பணி நடைபெறுகின்றது. ஆனால் தொடர்ந்தும் அகழ்வு பணி நடைபெற வேண்டும். இதற்கான முடிவுகள் கிடைக்க வேண்டும் என்பது தான் மக்களுடையதும் எங்களுடையதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

உண்மைத்தன்மை வெளிப்பட வேண்டும். பொறுப்பு கூறல் விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் பொறுப்பு கூறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடு என மேலும் தெரிவித்தார். (ம-7,299)

# எழுவைதீவு வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்குக

## பிரதேச மக்கள் கோரிக்கை

(எழுவைதீவு)

யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை பிரதேச செயலகத்திற்கு உற்பட்ட எழுவைதீவு பிரதேச வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட வைத்தியர் ஒழுங்காக சமுகம் தருவதில்லை என பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் தெரிய வருவதாவது,

சுமார் 700 பேர் கொண்ட அடிப்படை வசதிகள் அற்ற குடும்பங்கள் வாழ்ந்து வரும் தீவுப் பிரதேசமாக எழுவைதீவு விளங்குகிறது.

குறித்த பிரதேசத்தில் வெளிநாட்டில் வசிக்கும் கொடையாளி ஒருவரால் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் இலவசமாக கட்டிக் கொடுக்கப்பட்டது.

இங்கு திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வைத்தியசாலைக்கு வரும் வைத்தியர் ஏனைய நாட்களில் சமூகமளிப்பதில்லை

இரவு நேரங்களில் நோய்வாய்ப்படும் மக்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதாயின் கடல் கடந்து ஊர்காவற்துறை அல்லது யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் இக்கட்டான சூழ்நிலையே காணப்படுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டினார்.

எழுவைதீவு வைத்தியசாலையில் வைத்தியர் தங்குவதற்கான விடுதி அமைத்துக் கொடுத்தும் வைத்தியர் இரவு நேரங்களில் தங்குவதில்லை.

அதுமட்டுமல்லாது குறித்த வைத்தியசாலையில் வைத்தியர் இல்லாத நாட்களில் முதலுதவி செய்யக்கூடிய அளவிற்கு தாதியர்கள் பயிற்சி அளிக்கப்பட வில்லை எனவும் அப்பகுதி மக்கள் குற்றச் சாட்டியுள்ளனர்.

ஆகவே எழுவைதீவு மக்களின் சுகாதாரத் தேவையை நிறைவேற்றும் பொருட்டு நிரந்தர வைத்தியர் ஒருவரை தமக்கு நியமித்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ம-7)

# குடியுரிமை தொடர்பில் சட்ட நடவடிக்கை

## மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

பொருளாதார குற்றவாளிகளாக உயர்நீதிமன்றினால் அறிவிக்கப்பட்ட தங்களின், குடியுரிமை தொடர்பான விடயம் நீதிமன்றுக்குச் சென்றால், அது குறித்து உரிய சட்ட நடவடிக்கை எடுப்போம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெல்லன்வில ரஜமகா விகாரையில் இடம்பெற்ற நிகழ்வுகளை அடுத்து, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், குடியுரிமைகளை பறிக்குமாறு கூறப்பட்டாலும் இது வரை அவ்வாறனதொரு விடயம் இடம்பெறவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவேளை இறுதி முடிவுகள் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டாலோ அல்லது அவற்றையும் மீறி குடியுரிமை தொடர்பான விடயம் நீதிமன்றத்திற்குச் சென்றாலோ அங்கு நிச்சயம் போராடுவோம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)

# தரமற்ற மருந்து நால்வருக்கு மறியல்

(கொழும்பு)

தரமற்ற இம்யூனோ குளோபுலின் ஊசி குப்பிகளை கொள்வனவு

செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட மருத்துவ வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் நால்வரும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று கைது செய்யப்பட்ட குழுவினரை மாளிகாகந்த நீதவான் திருமதி லோச்சனா அபேவிக்ரம முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிக்க சர்வதேச நாணய நிதியம் செய்த பரிந்துரைகள் பற்றிய ஒரு மேலோட்ட பார்வை

04

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



ஆட்சி செயன்முறையில் நேர்மைத் தன்மையும், வெளிப்படைத் தன்மையும், பொறுப்பு கூறலையும் கொண்டு வருவதற்கு சொத்துகளைப் பிரகடனப்படுத்துவது அவசியமாக உள்ளது. சொத்துகளைப் பிரகடனப்படுத்துவதை இலங்கையின் பல அரசியல் வாதிகள் தொடர்ந்தும் தவிர்த்து கொண்டு வருகிறார்கள்.

இதன் காரணமாக அவர்கள் எவ்வாறு சொத்துக்களை சேர்த்தார்கள்.எங்கிருந்து அவ்வளவு சொத்துக்களை சேர்த்தார்கள், எங்கு அதனை முதலீடு செய்கிறார்கள், எந்தெந்த நாடுகளில் தமது சொத்துக்களை பதுக்கி வைத்திருக்கிறார்கள் போன்ற விடயங்களைப் பொதுமக்கள் அறிய முடியாதுள்ளனர்.

இது இன்னுமொரு பக்கத்தில் தேர்தல் காலத்தில் மோசமான ஊழல் மோசடியையும், பணத்தையும் பொருளையும் கொடுத்து வாக்குகளை விலைக்கு வாங்கும் கலாசாரத்தையும் இலங்கையில் உருவாக்கி இருப்பதை நாம் பார்க்க முடியும். இந்த மோசமான நிலையை முறியடிக்க வேண்டுமாக இருந்தால் அரசியல்வாதிகள் சொத்துக்களை பகிரங்கப்படுத்துவது அவசியமாகும். இதை அடிப்படையாகக் கொண்டே இப் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

**பரிந்துரை-3 புதிய நிதிக் குற்றச் சட்டங்களின் வளர்ச்சி**

2003 ஆம் ஆண்டு ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் மாநாடு **(UN Convention Against Corruption)** மற்றும் நிதி நடவடிக்கை பணிக்குழு **(Financial Action Task Force )** தரங்களுக்கு ஏற்ப, ஏரல் 2024 இற்குள் பண மோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவியை குற்றமாக்க புதிய குற்றவியல்சட்டங்களை IMF அறிக்கைகோருகிறது.

இது நீதி அமைச்சகத்திற்கு பரிந்துரைக்கப்படுகிறது. இது, சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவது மற்றும் பொறுப்புணர்வை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நிதி நடவடிக்கை பணிக் குழு **(FATF)** என்பது உலகளாவிய பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதி கண்காணிப்பு அமைப்பாகும். இந்த சட்ட விரோத நடவடிக்கைகள் மற்றும்சமூகத்திற்கு ஏற்படும் தீங்குகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட சர்வதேச தரங்களை இது அமைக்கிறது.

சட்டத்துக்குப் புறம்பான பணத்தினைத் (கறுப்புப்பணம்) 'தூய்தாக்கல்' செய்வதனைத் தடுப்பதற்கு குற்றவியல் சட்டத்தை இறுக்கமாக்க வேண்டும். அதன் ஊடாக கறுப்புப் பணத்தினைத் தூய்தாக்குவதனைத் தடுக்க வேண்டும் என்பதே இதன் முக்கிய நோக்கம். 2016 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட, பணம் தூய்தாக்கலுக்கு எதிரான சட்டமானது பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது. அதனால் சட்டவிரோத பணப்புழக்கத்தினை நிறுத்த முடியாமல் உள்ளதாக இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது.

**பரிந்துரை-4 கணக்காய்வு சட்டத்தைத் திருத்தலும் மேலதிக கட்டண வசூலும்**

கணக்காய்வு சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பதே நான்காவது பரிந்துரையாகும். கணக்காய்வு சட்டத்தில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. கணக்காய்வு சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் அரச நிறுவனங்களில் ஊழல், மோசடிகள் பல்கிப்பெருகுவதற்கு காரணமாக இருக்கின்ற அதேவேளை, அரச நிறுவனங்களில் பொது நிதியை பயன்படுத்துவதில் நேர்மைத்தன்மை, பொறுப்புக்கூறல், வெளிப்படைத் தன்மை இல்லாமல் போவதற்கும் காரணமாக அமைந்துள்ளது.

ஆகவேதான் கணக்காய்வு சட்டம் திருத்தப்பட்டு, அதில் புதிய ஏற்பாடுகள் கொண்டுவரப்பட்டு கணக்காய்வு இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது. மேலும் அரச நிதியினை மற்றும் பொதுச் சொத்துக்களை பயன்படுத்துதல் தொடர்பான சரியான மேற்பார்வையினை செய்யத் தவறும் அதிகாரிகள் மற்றும் பிரதம கணக்காளர்கள் ஆகியோரிடம் கடமையை செய்யத் தவறியமைக்காக அதிக பணத்தினை வசூலிக்க வேண்டும் என பரிந்துரை செய்யப்படுகின்றது.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக கணக்காய்வு ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட்ட போதும், அதன் தொழிற்பாடு சம்பந்தமான சட்டம் ஒன்று இருக்கவில்லை. 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக அவ் ஆணைக்குழு இல்லாமல் செய்யப்பட்டது. 21 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக மீண்டும் நிறுவப்பட்டது.

**பரிந்துரை-5 நிறுவனங்களின் நன்மைபயக்கும் உரிமையாளர்களின் பதிவேட்டைத் தயாரித்தல்.**

நிறுவனச் சட்டத்தில் தற்போது இல்லாத நிறுவனங்களின் ஆதாய உரிமை தொடர்பான சட்டங்களைத் தயாரிக்கவும் அல்லது மாற்றவும் ஏப்ரல் 2024இற்குள் பயனளிக்கும் உரிமையாளர்களின் பொதுப் பதிவேட்டைத் தயாரிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது. இது குறுகிய காலத் தில்கைத்தொழில்அமைச்சினால்நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்பு மற்றும் பொறுப்புக் கூறல் மற்றும் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.

**பரிந்துரை-6 புதிய பொதுக் கொள்முதல் சட்டத்தை உருவாக்குதல்**

டிசம்பர் 2024இற்குள், நிதி அமைச்சு நல்ல நடைமுறையை பிரதி லிக்கும் மற்றும் பொது நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கும் பொதுகொள்முதல் சட்டத்தை **(Procurement law)** உருவாக்க வேண்டும் என்பது அறிக்கையின் இடைக்கால பரிந்துரையாகும். இலங்கையில் அரச நிறுவனங்கள் கொள்முதல் செய்கின்ற போது சில வழிகாட்டல்கள் மற்றும் கொள்கைகள் இருக்கின்றனவே தவிர சட்டமொன்று இன்னும் பாராளுமன்றத்தால் உருவாக்கப்படவில்லை.

ஊழலைக் கட்டுப்படுத்த இச்சட்டம் பெரிதும் அவசியமாகும். பொதுக் கொள்முதல் தொடர்பாக பொது மக்களுக்குத் தகவல்களை வழங்க வேண்டும். பாரிய அளவிலான கொள்முதல் செயற்பாடுகள் வெளிப்படைத்தன்மையுடன் இடம்பெற வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக கொள்முதல் ஆணைக் குழுவொன்று நியமிக்கப்பட்ட போதும், அதன் தொழிற்பாடு சம்பந்தமான சட்டம் ஒன்று இல்லை. 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக அவ் ஆணைக்குழு இல்லாமல் செய்யப்பட்டது. 21ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக மீண்டும் நிறுவப்பட்டது.

**பரிந்துரை-7 2022 குறைந்த விலைமனுகோரல் விகிதங்களைக் கொண்ட நிறுவனங்களின் செயல் முன்னேற்றத்தை இணையத்தளத்தில்வெளியிடுதல்.**

2022 ஆம் ஆண்டில் மிகக் குறைந்த அளவிலான போட்டி விலைமனுகோரல் கொண்டதாக நிர்ணயிக்கப்பட்ட 10 நிறுவனங்களின் போட்டித்தன்மையுடன் விலைமனு கோரல்செய்யப்பட்ட கொள்முதல் ஒப்பந்தங்களின் செயற்பாடு தொடர்பான முன்னேற்றம் குறித்த அறிக்கையை 2024 டிசம்பரில் இணையத்தளத்தில் வெளியிடப்பட வேண்டும்.

2022 ஆம் ஆண்டு சுமார் 10 முக்கியமான நிறுவனங்களில் போட்டித்தன்மை அடிப்படையில் விலைமனுகோரல் மற்றும் ஒப்பந்தங்கள் வழங்கல் இடம் பெறவில்லையென்பது தெரிகிறது. இந்நிறுவனங்கள் அரசியல் மற்றும் தனிப்பட்ட உறவின் அடிப்படையில் ஒப்பந்தங்களை வழங்கியுள்ளன. பாரிய திட்டங்களுக்காக ஒப்பந்தங்களை கோருகின்ற போது அது போட்டித்தன்மை மிகுந்ததாக இருக்க வேண்டும்.

போட்டித்தன்மை இல்லாவிட்டால் அங்கு ஊழல், மோசடிகள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் பெருகும். எனவே போட்டித்தன்மையின் அடிப்படையில் ஒப்பந்தங்கள் வழங்கல் இடம்பெற வேண்டும் என்பதோடு அது தொடர்பான முன்னேற்ற அறிக்கையினைப் பொதுமக்கள் பார்க்கக் கூடிய ஒரு இணையத்தளத்தில் வெளியிடப்பட வேண்டும் என்கிறது ஏழாவது பரிந்துரை.

**பரிந்துரை-8 கொள்முதல் மற்றும் நிதி நன்மைகளின் பட்டியல்களை வெளியிடுதல்**

இந்தப் பரிந்துரையானது 2024 முதல் நியமிக்கப்பட்ட இணையத் தளத்தில் ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் புதுப்பிக்கப்படும் பின் வரும் தகவலைகள் வெளியிட நிதி அமைச்சகத்திற்கு பரிந்துரைக்கிறது. இதன் மூலம் பொது கொள்முதல் தொடர்பான சகல ஒப்பந்தங்களையும் பொது மக்களுடைய பாவனைக்காக காட்சிப்படுத்த முடியும்.

- ஒரு பில்லியனுக்கும் மேலான அனைத்து பொது கொள்முதல் ஒப்பந்தங்களும், தேடக்கூடிய வடிவத்தில் ஒப்பந்தம் பெற்றவர்கள் பற்றிய விரிவான தகவல்கள்.
- முதலீட்டு ஊக்குவிப்பு சபை மற்றும் 2008 ஆம் ஆண்டின் மூலோபாய அபிவிருத்தி திட்டங்கள் சட்டம் எண். 14 மற்றும் வரி விலக்கு மதிப்பின் மதிப்பீட்டின் மூலம் வரிவிலக்கு பெறும் அனைத்து நிறுவனங்களின் பட்டியல்.
- சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வரிவிலக்கு பெறும் நிறுவனங்களின் பட்டியல் இது வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்தும் நோக்கில் குறுகிய மற்றும் நடுத்தர கால பரிந்துரையாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயங்கி...

உயிரிழந்தார்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 70 வயதான அருளப்பு விமலதாஸ் என்ற முதியவரே உயிரிழந்துள்ளார்.

நவாலி சென்.பீற்றேர்ஸ் தேவாலயம் அருகில் உள்ள வீதியில் நேற்றுக் காலை மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## மனித புதைகுழி...

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் மீள நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த செப்ரெம்பர் மாதம் 06ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி வரை அகழ்வாய்வுகள் இடம்பெற்றிருந்தது.

இவ் அகழ்வு பணியில் 17 எலும்புக்கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்ட நிலையிலும், துப்பாக்கிச் சன்னங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பினர் பயன்படுத்தும் இலக்கத்தகடு, உடைகள் உள்ளிட்ட சான்றுப்பொருட்களும் மீட்கப்பட்டிருந்த நிலையில் குறித்த அகழ்வுப்பணியானது இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

மீண்டும் அகழ்வுப் பணி கள் ஆரம்பிக்கப்படுமா? என்ற ஐயம் பல்வேறு தரப்பினரிடமும் நிலவிய நிலையில் மீண்டும் நேற்றுக் காலை 10 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் அகழ்வுப் பணியானது முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரி க.வாசுதேவ, தடயவியல் பொலிஸார், கிராமசேவையாளர் ஆகியோரின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டது.

இறுதியாக அகழ்வு பணிகள் நிறைவடைந்ததும் பாதுகாப்புக்காக மூடப்பட்டிருந்த பொலித்தீன் உறைகள், உடல் எச்சங்களுக்கு மேற்பகுதியில் காணப்பட்ட மண்கள் அகற்றும் பணி நடைபெற்று வருகின்றது.

சம்பவ இடத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதியின் வடக்கு அபிவிருத்திக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் எல். இளங்கோவன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், காணாமல்போனோருக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் தற்பரன், சட்டத்தரணிகளான வி.கே.நிறஞ்சன், கு.ஆன் சுமங்கலா மற்றும் கொக்குளாய் பொலிஸ் நிலைய பொலிஸார், தடயவியல் பொலிஸார், விசேட அதிரடி படையினர், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட தரப்பினர் இடத்தை பார்வையிட்டு கலந்துரையாடியதன் பின்னர் குறித்த அகழ்வுப்பணியானது ஆரம்பமாகியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ம-7,299)

## கட்டுப்பாட்டு...

படும் என வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதன்படி சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் ஊடாக ஒரு கிலோ சீனியை 275 ரூபாயுக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## நினைவேந்தும்...

னர்.

வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட நிலையில் மல்லாகம் நீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

குறித்த வழக்கில் ஆஜரான சட்டத்தரணிகளில் ஒருவரான சிரேஷ்ட சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் கருத்துத் தெரிவிக்கையில்,

நினைவேந்தலை தடுப்பதற்கு பொலிஸார் மேற்கொண்ட சதி முயற்சிக்கு எதிராக மல்லாக நீதிமன்றம் சிறந்த ஒரு தீர்ப்பை வழங்கியதோடு நினைவேந்துவதற்கான உரிமையையும் பாதுகாத்துள்ளது.

மல்லாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் நினைவேந்தல் உரிமையை தடுக்க முடியாது தேசிய பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படும் வகையில் யாராவது செயற்பட்டார்கள் எனப் பொலிஸார் கருதினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

மேலும் நினைவேந்தல் நிகழ்வுகளில் ஈடுபடுபவர்கள் தேசிய பாதுகாப்பு சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பொதுமக்களுக்கு இடையூறு இன்றி நினைவேந்தல்களில் ஈடுபட வேண்டும் என நீதிமன்றம் தனது கட்டளையில் கூறியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மாவீரர் நினைவேந்தலை தடை செய்யக்கோரி கடந்த வெள்ளியன்று மல்லாகம் நீதிமன்றத்தில் மானிப்பாய் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படவுள்ளது.

மேலும் நினைவேந்தலுக்குத் தடை கோரிய வல்வெட்டித்துறை பொலிஸாரின் கோரிக்கை கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது.

இதேநேரம் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுக்கு தடை விதிக்கக் கோரிய பொலிஸாரின்விண்ணப்பம் கடந்த வாரம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## மாவீ...

பாணம் நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்திற்கு முன்பாக அமைக்கப்பட்ட மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இன்று மாலை 6 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

1982 கார்த்திகை 27 முதல் 2009 வைகாசி 18 வரையான காலப்பகுதியில் தாய் மண்ணின் விடியலுக்காய் வித்தாகியவர்களில் கிடைக்கப்பெற முடிந்த 24,379 வீரர்களின் பெயர்களினை உள்ளடக்கிய கல்லறைகளையும் சில தகவல்களையும் உள்ளடக்கிய நினைவாலயம் உருவாக்கப்பட்டது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-7,33,104)

## இஸ்...

வுக்கு எதிராக அராலியில் நேற்று கண்டனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தமிழர்களின் புனிதமான கலாசார கலைகளில் ஒன்றான பரதநாட்டியத்தினையும் அதை பயிற்சி செய்பவர்களையும் மிகவும் இழிவுபடுத்தும் விதமாக பேசிய இஸ்லாமிய மதகுரு அப்துல் ஹமீட் அவர்களிற்கு எதிராக அரசு சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி நேற்று யாழ்ப்பாணம் அராலி பகுதியில் பரதம் கற்கும் மாணவ, மாணவிகளும் அவர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் மற்றும் உருத்திர சேனை அமைப்பினர் கண்டன போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



தன நிதானய
திகதி - 2023.11.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1334
Y 13 69 71 81 Y
Double Chance 22012

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3546
சீட்டிழுப்பு திகதி 20.11.2023
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 06 12 24 52
F 05768

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.20
சீட்டிழுப்பு இலக்கம் 613
மகரம் 01 13 31 41 மகரம்
50707 21

மஹஜன சம்பத
திகதி 2023/11/20
சீட்டிழுப்பு இலக்கம் 5304
P 4 8 7 3 0 0

மெகா பவர்
திகதி 20/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1652
T 25 09 15 67 78
Double Chance 36456

Lucky 7 லக்கி
திகதி 20.11.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0130
L7 இலக்கம் 2 9
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 4 0 4 1 8 9

சுபிரி தன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 20.11.2023 வெற்றி வாரம் 012 வர்ணம் ஊதா
Y 7 2 5 6 8 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,752,243.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2278 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.11.20 தினம் திங்கட்கிழமை
16 31 42 63 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,238,596/-

சனிதா Shanida
திகதி 2023.11.20 வெற்றி வாரம் 4439
22 24 34 73 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,429,048.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3990 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.20 தினம் திங்கட்கிழமை
13 23 34 45
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,528,088/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
W 24 01 05 26 73
1454 பச்சை 2023.11.20 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 467,433,514.20

ஜயோதா Jayoda
திகதி 2023.11.20 வெற்றி வாரம் 1975 வர்ணம் செம்மஞ்சள்
12 55 57 60 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 20,557,416.00

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2104
சீட்டிழுப்பு திகதி: 2023.11.20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,472,280/-
09 36 48 65 A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸார்...

உயிரிழந்தமை தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் இருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருட்டு குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றின் உத்தரவில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விளக்கமறியல் கைதி உயிரிழந்தமை தொடர்பில் பொலிஸார் மீது உறவினர்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணை குழு நியமிக்கப்பட்டுள்ள நிலையில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என அறிய முடிகிறது. (ம-7)

## சீன-இலங்கை...

பாடு எட்டப்பட்டுள்ளது.

சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியும் அரச உறுப்பினருமான சேன் யிங்க் (Shen Yiqin) நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் உட்பட இலங்கைக்கு சீனா வழங்கும் ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி, அதற்காக சீன ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவித்தார்.

அத்துடன், சுற்றுலா, விளையாட்டு, விவசாயம் ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பதே இலங்கையின் எதிர்பார்ப்பு எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் துறைமுக நகரம் என்பன இன்று முதலீட்டுக்குத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

பொருளாதார ரீதியில் அதிக பங்களிப்பை வழங்கக்கூடிய பெல்ட் அன்ட் ரோட் (Belt & Road) திட்டத்தின் இரண்டாவது கட்டத்திற்குப் பிரவேசிப்பதற்கு அதன் பங்காளரான இலங்கை போன்ற நாடுகள் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிராந்திய விரிவான பொருளாதார பங்காளித்துவத்திற்குள் (RCEP) பிரவேசிக்க இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி விளக்கினார்.

இந்துசமுத்திரம், கடற்பயணத்திற்கான சுதந்திர வலயமாக இருக்க வேண்டும் எனவும் புவிசார் அதிகாரப் போட்டியின்றி அமைதியான வலயமாக பேண இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

சீனா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மிக விரைவில் நடைமுறைப்படுத்தவும் இரு தரப்பும் உடன்பாடு தெரிவித்தன.

இலங்கைக்கு சீனாவின் தொடர்ச்சியான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்திய ஷென் யிங்க், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் வலியுறுத்தினார். (ம-7)

## மாவீரர்...

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தனது இன்னுயிரை போராட்டக்களத்தில் தியாகம் செய்த முதலாவது மாவீரர் சங்கரின் நினைவாக, அவர் உயிரிழந்த கார்த்திகை 27ஆம் திகதி, மாவீரர் தினமாக 1987ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் பிரகடனப்படுத்தப்பட்டது.

அன்றிலிருந்து தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர் தேசங்களில் தமிழீழ விடுதலைக்காய் உயிர் தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகூரும் அஞ்சலிகள் நடைபெற்றுவருகின்றன.

மாவீரர் நாளை அனுஷ்டிக்கும் வகையில் கார்த்திகை 21ஆம் திகதி மாவீரர் வாரம் ஆரம்பமாவது வழமை.

அந்த வகையில் மாவீரர் வார நிகழ்வுகளை நடத்துவதற்குத் தடை விதிக்கக் கோரி, சில பொலிஸ் நிலையங்கள் நீதிமன்றங்களில் அனுமதி கோரியிருந்த போதிலும் அவை நீதி மன்றங்களினால் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


**பணியாளர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு முழுநேரமாக (பகல்) பணியாற்றக் கூடிய சுத்திகரிப்புப் பணியாளர் (பெண்) தேவை.

(வயது 30 - 50)

யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு

076 097 3121



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17944)

076 825 7716 (ஆகாஸ்)



**CANADA VISITOR VISA**

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்

CIMS COLLEGE (C-7687)

0777-068-777

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்

V2 TRAVELS



**ENGLISH LITERATURE**

GRADE-9

P.THARMAKUMARAN (P.Mathan)

BA(Eng.Lit), Dip.in.Eng (17946)

NEWTON GROUP CLASSES

Near TCT Super Market

☎-077 792 3653



**Canada and Italy Visa**

(Canada, Italy, UK, USA) Work visa, Visitor visa, students visa & business visa செய்து தரப்படும்.மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Visa Consultant
134, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna.

077 038 5584 (17936)



**விரைவு பொதிகள் சேவை**

DHL

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன. (17936)

Lanka Cargo Worldwide Express

இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

070 375 0002



**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-7687)

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



**வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்** DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.

0777 554 528 (17945)


# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 21 - 03 - 1932 | 20 - 11 - 2023 |



## இராசையா பீதாம்பரம் (பற்குணம்)

### (வண்ணை கலைவாணர் நாடக மன்ற ஸ்தாபகர்)

*குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடி வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பீதாம்பரம் (பற்குணம்) அவர்கள் நேற்று (20.11.2023) திங்கட்கிழமை காலமானார்.*

*அன்னார் இராசையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் வல்லிபுரம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னம்மாவின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற நடராஜாவின் அன்புச் சகோதரனும் கருணாநிதி (சாயி போட்டோ), சிவஅன்பு (நிலஅளவைத் திணைக்களம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரி, கனீந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் இந்திரன், கௌசி, சிவசக்தி, தர்சினி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் சாஜிசங்கர், அஜிதா, ஜனந்தன், அஜந்தன், கஜந்தன், சாயிகீர்த்தனா, ஜனார்த்தனன், வசீகரன், லிவிக்ஷா, மானஸ்வி, யதுஷி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.11.2023) புதன்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

"சாயி போட்டோ"
1010/11, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (17948)

தகவல் :
குடும்பத்தினர்
077 226 3864, 077 615 3785

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி. **ஆரணி கைலர்** அவர்களின் பாசமிகு தந்தை

அமரர்

**சோமசுந்தரம் சிதம்பரநாதன்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-7689)

**பிரிவுத் துயரில் – ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org